பக்கங்கள்: 13 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 14 திங்கட்கிழமை 28.06.2021 கதிர் 235

## இனி இது ரகசியம் அல்ல!

மொட்டுக் கட்சி கூட்டணி அரசுக்குள் அடுத்த ராஜபக்ஷவும் – பஸில் ராஜபக்ஷவும் – எம்.பியாகவும், அமைச்சராகவும் நுழைவார் என்ற செய்தி மொட்டுக் கூட்டணிக்குள் பெரும் சல சலப்பை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

பக்கம்02

# யாழில் நாமல் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு





(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு நேற்று விஜயம் செய்த இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அலுவல்கள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டார்.

வடமராட்சி, முள்ளியில் சேதனக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை 2



# துமிந்த விடுதலை மூலம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் கோட்டா

## வடமராட்சியில் நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு



(இ.கலையமுதன்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னுடைய அதிகாரத்தை மரணதண்டனைக் கைதி துமிந்த சில்வாவின் விடுதலையில் துஷ்பிரயோகம் செய்துள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சி, முள்ளியில் சேதனக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற்சாலை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

# முல்லையில் வாள்வெட்டுக்குழு அட்டகாசம்; காருக்குத் தீ வைப்பு

## ஒருவர் படுகாயம்; பொலிஸார் தீவிர விசாரணை



முல்லைத்தீவு, கள்ளப்பாடு பகுதியில் வீடொன்றினுள் புகுந்த வாள் வெட்டுக்குழு வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு வீட்டில் நின்ற காருக்கும் தீ வைத்துள்ளது.

நேற்றிரவு இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் , கார் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# டக்ளஸின் கருத்துக்கு எதிராக தமிழக மீனவர்கள் போர்க்கொடி

(ந.லோகதயாளன்)

தொப்புள்கொடி உறவுகளின் உணர்வைப் புரிந்துகொள்ளாத அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை இந்திய மத்திய அரசு ஏற்கக்கூடாது என இராமேஸ்வரம் விசைப் படகுகள் சங்கத் தலைவர் யேசுராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தாயகத் தமிழக உறவுகள் இலங்கை எல்லைக்குள் ஊடுருவினால் 2

# மேலும் 39 பேர் சாவு; மொத்தக் காவு 2,944

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 39 உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 27 ஆண்களும், 12 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி சாவடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 944 ஆக அதிகரித்துள்ளது.

# கொரோனோவால் முல்லைத்தீவு வாசி நேற்று உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயால் ஒருவர் உயிரிழந்துள்ளார். 2

# அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க உடனே வழிசெய்யுங்கள்!

## நாமலிடம் மகஜர் கையளிப்பு



அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க உடனடியாக வழிசெய்யுமாறு கோரி, தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் மகஜர் கையளித்துள்ளனர். 2

# 1,867 பேருக்கு நேற்று கொரோனா

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,867 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 53 ஆயிரத்து 618 ஆக எகிறியுள்ளது.

கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 18 ஆயிரத்து 998 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, 2

# தமிழ்க் கட்சிகளை இணைக்கும் நேற்றைய கூட்டம் ஒத்திவைப்பு

## தொடர் முயற்சியில் ரெலோ முனைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

தமிழ்த் தேசியக் கட்சிகள், அமைப்புகளை ஒன்றிணைத்துச் செயற்பட வைப்பதற்கான முன் முயற்சியாகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடையே நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குசூம் முறையில் நடத்தப்படவிருந்த கலந்துரையாடல் பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த முயற்சியைத் தளர விடாது முன்னெடுப்பதில் ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் அவரது கட்சிப் பிரமுகர்களும் தீவிரமாக இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றைய இரு பங்காளிக்கட்சிகளின் தலைவர்களும் – மாவை சேனாதிராசா (இலங்கைத் தமிழரசு), 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பஸில் ராஜபக்ஷ எம்.பியானாலும் – அவருக்கு அமைச்சர் பதவி உடனடியாக வழங்கப்பட்டாலும் – நிச்சயமாக அவருக்கு நிதி அமைச்சுப் பதவி கிட்டாது, முன்னைய அரசுகளில் அவர் இருந்த மாதிரி பொருளாதார அபிவிருத்தி அமைச்சுதான் அவருக்கு ஒப்படைக்கப்படும் எனத் தெரிகின்றது.

பஸிலும் அமைச்சரானால் அமைச்சரவையில் ஐந்து ராஜபக்ஷக்கள் இருப்பார்கள்.

அமைச்சரவைத் தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் தமையன் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் மூத்த தமையன் சமல் ராஜபக்ஷ, இளைய சகோதரன் பஸில் ராஜபக்ஷ, பிரதமரின் மகன் நாமல் ராஜபக்ஷ எல்லோரும் அமைச்சரவை உறுப்பினர்கள்.

ஒரே அமைச்சரவையில் ஜனாதிபதி, பிரதமர் முதற்கொண்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து அமைச்சர்கள், உலக சரித்திரத்தில் ஒரு சாதனையாக இது இருக்கும். கின்னஸ் புத்தகத்திலும் பதியப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாட்டின் நிதிப் புரள்கையில் 90 வீதம் இந்த ஐந்து அமைச்சர்கள் ஊடாகத்தான் நடக்கும்.

இது குடியாட்சியா அல்லது ராஜபக்ஷ குடும்பத்தின் முடியாட்சியா என்ற சந்தேகம்தான் நீடிக்கும்.

எனினும் பஸிலின் உள்வருகை அப்படி ஒன்றும் cake walk போல இலகுவாக இருக்கப்போவதில்லை என்கிறார் தென் பகுதி ஊடக நண்பர் ஒருவர்.

ஏற்கனவே விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, டிரான் அலஸ் போன்ற மொட்டுக் கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகளின் தலைவர்கள் ஒன்று கூடி, பஸிலின் அரசுக்குள்ளான உள்நுழைவு குறித்து விரிவாகத் தமக்குள் பேசியிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

பஸில் நுழைகின்றமைக்கு எதிராக கூட்டணிக்குள் இந்தக் கட்சியினர் – சிறிய கட்சியின் தலைவர்கள் – வெளிப்படையாகத் தமது எதிர்ப்பைக் காட்ட மாட்டார்கள். ஆனால் அதன் விளைவுகளை ராஜபக்ஷக்கள் உணரும் விதத்தில் அவர்கள் காட்டுவார்கள் என்றார் எனது அந்த ஊடக நண்பர்.

*"அதெப்படி...? எனக்குப் புரியவில்லையே...!"* – என்றேன் நான்.

அவர் விபயத்தை விளக்கினார்.

தெற்கில் பெரும்பான்மையான உள்ளூராட்சி மன்றங்கள் மொட்டுக் கட்சி வசமே உள்ளன. கூட்டணிக்குள் அதிருப்தியுற்றுள்ள கட்சிகளின் உறுப்பினர்கள், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் சேர்ந்து வாய்ப்பான உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியைப் புரட்டும் – அல்லது அந்தச் சபைகளில் ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கும் மொட்டுக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களுக்குத் தலையிடி கொடுக்கும் – காய் நகர்த்தல்களை முன்னெடுப்பார்கள் என நம்பப்படுகின்றது.

இது தொடர்பில் இக்கட்சிகளின் தலைவர்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்களுக்கும் இடையில் ஏற்கனவே சில புரிந்துணர்வு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருக்கின்றன என்றும் அறியவருகின்றது என்றார் அவர்.

அரசியலில் திட்டங்கள் வகுப்பதிலும் காய்களை நகர்த்துவதிலும் பஸில் சாணக்கியர்தான். ஆனாலும் மொட்டுக் கூட்டணிக்குள் ஒன்றுபட்டு நிற்கும் சிறிய கட்சிகளை கையாள்வதில்தான் அரசின் அரசியல் எதிர்காலமே தங்கியிருக்கின்றது.

இவ்விடயத்தில் மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சு.க. மதில் மேல் பூனையாக இருக்கின்றது. அதனை சிறிது தம் பக்கம் வளைத்துப் போட்டால் – அல்லது அவற்றின் வலையில் சு.க. வீழ்ந்தால் – ராஜபக்ஷக்கள் பாடு திண்டாட்டமாகத்தான் இருக்கும்.

சாணக்கிய தந்திரம் எப்படிக் காய்களை நகர்த்தப் போகின்றது, எதிர்ப்புகளை சமாளிக்கப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

– மின்னல் –

## கொரோனாவால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெடுங்கேணி, கரடிப்பிலவு பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் சிறுநீரக நோய் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை சிகிச்சை முடித்துக் கொண்டு வீடு திரும்பியிருந்தார்.

எனினும், திடீர் வயிற்று வலி காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இந்தநிலையில், நேற்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அவர் உயிரிழந்துள்ளார்

# இலங்கைக்குக் கடத்தவிருந்த பொருள்கள் இராமேஸ்வரம் கரையில் நேற்று சிக்கின!

(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கடத்துவதற்காக இராமேஸ்வரம் கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்ட பொருள்களை தமிழகக் கடலோரக் காவல் படையின் விசேட பிரிவினர் நேற்று கைப்பற்றியுள்ளனர். அத்துடன் நால்வரைக் கைது செய்துமுள்ளனர்.

இலங்கைக்குக் கடத்துவதற் காக 200 கிலோ ஏலக்காய், 100 கிலோ பதப்படுத்தப் பட்ட கடல் அட்டை, 450 கிலோ சுறா துடுப்பு ஆகியவற்றை ஏற்றி வந்த வாகனத்தை கீழக்கரை அருகே இராமநாதபுரம் வரையில் விரட்டிச் சென்று இடைமறித்த கடலோரக் காவல் படையினர் இவற்றைப் பறிமுதல் செய்துள்ளனர்.

இதன்போது கடத்தலுக்குப் பயன்படுத்திய வாகனம் மடக்கப்பட்டது. வாகனத்தில் இருந்த கடத்தல் கும்பலைச் சேர்ந்த நால்வரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## துமிந்த விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

16 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமை உண்மையில் மகிழ்ச்சியான ஒரு விடயம். என்ன அடிப்படையில் மற்றவர்களை விடுதலை செய்யவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால், துமிந்த சில்வாவை சாட்டோடு சாட்டாக விட்டமை கண்டனத்துக்குரியது. இது, நீதிமன்ற சுயாதீனத்தைக் கேள்விக்குட்படுத்துகின்றது. ஜனாதிபதி தன்னுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார் – என்றார்.

தமிழ் அரசியல் கைதி ஆனந்த சுதாகரின் பிள்ளைகளுடன் கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், அவரின் விடுதலைக்காக நாங்கள் குரல் கொடுப்போம் என்று தெரிவித்தார்.

## தமிழ்க் கட்சிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சித்தார்த்தன் (புளொட்) ஆகிய இரு வரும் – கொள்கையளவில் இணங்கியுள்ளனர் என அறிய வந்தது.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன், இக்கூட்டத்தில் பங்குபற்றக் கூடிய ஏனைய தலைவர்கள் குறித்து விவரம் கேட்டுள்ளார் என்றும் –

தமது தமிழ் மக்கள் தேசிய கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிற பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான சிறிகாந்தா, அனந்தி சசிதரன் ஆகியோரைப் புறமொதுக்கி இந்த ஏற்பாடு நடக்குமானால் அதில் தம்மால் பங்குபற்ற முடியாது என்றும் –

கூட்ட ஏற்பாட்டாளர்களான ரெலோத் தரப்புக்கு மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்தியுள்ளார் என அறிய வருகின்றது.

தங்கள் கட்சியினதும், தங்கள் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளினதும் பிற தலைவர்களோடு பேசிய பின்னர், பொருத்தமான நேரத்தை ஒதுக்குவதற்கான வாய்ப்புக் குறித்து அறிவிக்க முடியும் என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் கூட்ட ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்துள்ளார் என்றும் தெரியவந்தது.

நீதியரசர் விக்னேஸ்வரன் மற்றும் சுரேஷ் பிறேமச்சந்திரன் ஆகியோர் எழுப்பியுள்ள ஐயங்கள், ஆட்சேபங்களை சுமுகமாகப் பேசித் தீர்த்து, இணக்கத்தை ஏற்படுத்தி, விரைவில் பூர்வாங்கக் கலந்துரையாடலை நடத்தி முடிக்க முடியும் என ரெலோ வட்டாரங்கள் உறுதி தெரிவித்தன.

## டக்ளஸின் கருத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களது வலைகள், படகுகள் அழிவடைய வேண்டும் என எண்ணி நடுக் கடலில் பழைய பஸ்களை அமைச்சர் டக்ளஸ் இறக்கினார். படகுகளுக்குச் சேதம் ஏற்பட்டால் பஸ்களை எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும் என நாம் தெரிவித்தபோது பஸ்களை எடுத்துச் சென்றால் பழைய ரயில் பெட்டிகளை இறக்குவோம் என டக்ளஸ் எகத்தாளம் இட்டுள்ளார்.

இலங்கையின் பல பகுதிகளிலும் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து எங்கும் இறங்கி அவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர். ஆனால், இலங்கைக்கு இந்திய மீனவர்கள் மட்டும் எதிரிகளா?

இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டும், இடித்தும் கொல்வது அண்மை வரையில் தொடர்கின்றது. இந்தநிலையில் கொழும்பில் இந்தியத் தூதுவரைச் சந்தித்து இந்தியாவிடமே உதவியை கோருகின்றார் டக்ளஸ்.

இவற்றைக்கருத்தில்கொண்டு இலங்கை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை மத்திய அரசு தற்போது ஏற்கக்கூடாது – என்றார்.

# கிளிநொச்சி விபத்தில் பொலிஸார் ஒருவர் பலி



யாழ்ப்பாணம் நீதிமன்ற கட்டத்தொகுதி பொலிஸ் காவலரணில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி – கரடிப்போக்கு இணைப்பு வீதியில் நேற்று மாலை 4.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றும் அநுராதபுரத்தைச் சேர்ந்த பி.எஸ்.புஷ்பகுமார என்பவரே உயிரிழந்துள்ளார்.

விடுமுறை முடித்து கடமைக்குத் திரும்புவதற்காக மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் பயணித்துள்ளார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டையிழந்து வாய்க்காலுக்குள் பாய்ந்ததால் விபத்து இடம்பெற்றது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் ஒரு மணிநேரத்துக்கு பின்பே சடலமும் மோட்டார் சைக்கிளிலும் வாய்க்காலில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அனைத்து அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் அரசியல் கைதிகளாக இருந்து அண்மையில் விடுதலையாகிய நபர்களும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

அவர்கள் கையளித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 22.06.2021 அன்று நாடாளுமன்றத்தில் மிக நீண்ட காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி விசேட யோசனை ஒன்றை முன்வைத்து உரையாற்றிய அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு அரசியல் கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் ஆகிய நாம் வலி மிகுந்த வரவேற்பை வெளிப்படுத்துகின்றோம். அதுமட்டுமின்றி உடனடியாகவே அமைச்சரின் யோசனைக்கு செயல் வடிவம் கொடுக்கும் முகமாக கடந்த 24ஆம் திகதி 16 தமிழ் அரசியல் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பை வழங்கி விடுதலை செய்த ஜனாதிபதியின் செயற்கருமத்தை மனதார மெச்சுகின்றோம்.

உண்மையில் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருக்கின்ற அரசு ஒன்று சிறையில் வாடும் எமது உறவுகளின் வேதனையையும் அவர்களைப் பிரிந்து தவிக்கு எமது கண்ணீரையும் புரிந்து கொண்டுள்ள விடயமானது எம்மனங்களில் நம்பிக்கையை விதைத்துள்ளது.

விடுதலை நாள்களை அண்மித்து சிறிய தண்டனைகளை அனுபவித்து வந்திருந்த ஒரு பகுதி அரசியல் கைதிகள் மாத்திரமே விடுவிக்கப்பட்டிருப்பினும் இதை ஒரு ஆரோக்கியமான முன்னெடுப்பாகவே நாம் காண்கின்றோம். இந்த மனிதாபிமான விடுதலையின் தொடர்சியாக பாரிய தண்டனைகளுக்கு ஆளாகியுள்ளவர்களுக்கும் வழக்கு விசாரணைகளுக்கு முகம் கொடுத்துள்ளவர்களுக்கும் விடுதலை விமோசனம் கிட்ட வேண்டும். அப்போதுதான் இனங்களுக்கிடையிலான சந்தேக மனப்பாங்குகள் சீரமைந்து நல்லிணக்கம் முழுமை பெறும். நாடு செழிப்புறும்.

நடந்து முடிந்த போர் ஒரு நாட்டினுடைய இரு வேறு இனச்சமூகங்களுக்கும் பல கசப்பான பாடங்களைக் கற்பித்துள்ளது. போரின் சத்தங்கள் ஓய்ந்து 12 வருடங்கள் ஓடி மறைந்துகொண்டிருக்கின்ற நிலையில் இனிமேலும் 'தலைக்குத்தலை உயிருக்கு உயிர்' எனப் பழிதீர்க்கும் படலத்தை விரித்துப் பசியாறத்துடிக்காது அனைவரும் பொறுப்புணர்ந்து பயணிப்பதே காலக்கட்டாயமாகின்றது. இதுவே உறவுகளைப் பிரிந்து தவிக்கும் தாயுள்ளங்களின் மொத்தப் பிரார்த்தனை ஆகும் – என்றுள்ளது.

## யாழில் நாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சரால் திறந்துவைக்கப்பட்டது.

பலாலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத்தையும் அவர் திறந்து வைத்தார்.

தையிட்டியில் பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத் திட்டமும் அமைச்சரால் திறந்துவைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் கல்லூரியின் நீச்சல் தடாகம், உடல் வலுவூட்டல் நிலையம் மற்றும் விளையாட்டு மைதானம் என்பவற்றைப் பார்வையிட்டார்.

இறுதியாக இந்தியாவின் பங்களிப்புடன் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார நிலையத்துக்கு வருகை தந்தார்.

இதன்போது கலாசார நிலையத்தைப் பார்வையிட்ட அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத்தூதர் பாலச்சந்திரன், யாழ்ப்பாணம் மாநகர மேயர் வி.மணிவண்ணன், யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர் ஜெயசீலன் ஆகியோருடன் யாழ்ப்பாணம் கலாசார நிலையம் தொடர்பில் கலந்துரையாடினார்.

இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க, இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அங்கஜன் இராமநாதன், யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் அமைச்சர் நாமல் பங்கேற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

## 1, 867 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாத் தொற்று காரணமாக வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 676 ஆக அதிகரித்துள்ளது.

# அரசைக் கவிழ்க்கவே முடியாது அமைச்சர் ஹெகலிய திட்டவட்டம்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு, நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் நிறுவப்பட்ட அரசு. மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி செய்கின்ற அரசு.

எனவே, எந்தவொரு சதித் திட்டத்தாலும் இந்த அரசைக் கவிழ்க்கவே முடியாது. இந்தத் தகவலை அரசுக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டுவோருக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றேன் என அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அரசைக் கவிழ்க்க உள்ளேயும், வெளியேயும் சதி முயற்சிகள் நடக்கின்றன என்று ஊடகங்களின் செய்திகள் மூலம் தான் அறிந்துகொண்டேன். இது உண்மையா, பொய்யா என்று சதித் திட்டங்களைத் தீட்டுவோருக்குத்தான் தெரியும்.

எனினும், ஜனாதிபதி - பிரதமர் - அமைச்சர்கள் - இராஜாங்க அமைச்சர்கள் - ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஓரணியில் தான் செயற்படுகின்றார்கள். இதை மீறி கட்சிக்குள்ளே சதித்திட்டங்கள் நடக்கின்றன என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

அதேவேளை, அரசைக் கவிழ்க்க வெளியே நீண்ட நாள்களாகப் பல சதி முயற்சிகள் நடக்கின்றன. அதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இதில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர்தான் பிரதான வகிபாகம் வகிக்கின்றனர்.



அரசையும், மக்களையும், ஒட்டுமொத்த நாட்டையும் குழப்பும் வகையில் ஊடகங்களுக்கு அவர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். பஸில் ராஜபக்ஷ, தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்ற தகவலைக்கூட எதிரணியினர் தான் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

உண்மையில் இதுவரைக்கும் எம்.பியாகும் தீர்மானத்தை பஸில் ராஜபக்ஷ எடுக்கவில்லை. அவர் விரும்பினால் நாடாளுமன்று வர முடியும். அவருக்காக அரசில் பலர் எம்.பி. பதவியை இராஜிநாமா செய்யத் தயாராகவுள்ளனர். பஸில் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநர். எனவே, அரசில் அவரின் வகிபாகம் முக்கியம். - என்றார்.

## மீண்டும் நாட்டில் பொதுமுடக்கம் வரலாம் டெல்டாவின் திரிவு தொடர்பில் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 27

உலக நாடுகளில் வேகமாகப் பரவிக் கொண்டுள்ள டெல்டா வைரஸ் தொற்று தற்போது திரிவுபட்ட வைரஸாக மாற்றமடைந்து பரவுகின்ற காரணத்தால் அது தொடர்பில் இலங்கையிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் நாட்டின் பயணத் தடை நீக்கப்பட்டுள்ளமை ஆரோக்கியமானதல்ல எனவும் எச்சரித்துள்ளனர்.

இப்போது பரவும் டெல்டா வைரஸ் நாட்டுக்குள் வேகமாகப் பரவ ஆரம்பித்தால் மீண்டும் பொது முடக்கத்துக்கு செல்ல வேண்டி வரும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

## 2019 ஆம் ஆண்டு விடுதலையான அரசியல் கைதி திடீரெனச் சாவு



2006 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தற்போதைய ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்ய முயன்றார் எனக் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலையான அரசியல் கைதியொருவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திடீரென உயிரிழந்தார்.

யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்திரபோஸ் செல்வச்சந்திரன் என்பவரே இவ்வாறு மயக்கமுற்று விழுந்த நிலையில் தனது 41 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

இவர் 2006 ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைப்பிரிவினரால் கைது செய்யப்பட்டு 14 ஆண்டுகள் தடுத்து வைக்கப்பட்டு கடந்த வருடம் ஜனாதிபதி சட்டத்தரணி கே. விதவராசாவின் வாதத்தையடுத்து கொழும்பு மேல் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார்.

2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் திகதி கொழும்பு, கொள்ளுபிட்டி பித்தலை சந்தியில் அப்போதைய பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைக் குண்டுதாரியால் நடாத்தப்பட்ட தாக்குதலில் மூன்று இராணுவ பாதுகாப்பு அதிகாரிகளுக்கு மரணத்தை விளைவித்ததுடன், பாதுகாப்பு செயலாளரான கோட்டாபய ராஜபக்ஷ, இராணுவ பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொது மக்களுக்கு கடும் காயங்களை ஏற்படுத்தியதுடன், அரச சொத்துக்களுக்கு பெரும் சேதம் விளைவித்தார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு 14 வருடங்கள் நடைபெற்ற விசாரணையின் பின்னர் நிரபராதியென கடந்த வருடம் 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.






## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வர்த்தக நிலையங்களில் விசேட சோதனை





மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வர்த்தக நிலையங்களை கண்டறிவதற்கான விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மண்முனை வடக்கு பிரதேச செயலகம், மட்டக்களப்பு மாநகரசபை, மட்டக்களப்பு பொலிஸார் ஆகியோர் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை காரணமாக அதனைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் ஒன்றுகூடுவதையும் சுகாதார வழிமுறைகளையும் இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தும் வகையிலான நடவடிக்கையின் கீழ் இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வ. வாசுதேவன், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. கிரிசுதன், மண்முனை வடக்கு பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் சுதர்சன், மட்டக்களப்பு மாநகரசபையின் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர், மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாலை ஆறு மணிக்கு முன்பாக சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட வேண்டும் என்ற மாவட்ட கொவிட் செயலணியின் அறிவுறுத்தல்களை மீறிய வர்த்தக நிலையங்களுக்கு கடுமையான எச்சரிக்கைகள் வழங்கப்பட்டு மூடப்பட்டன.

இதேபோன்று சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாத வகையில் செயற்பட்ட உணவு விடுதிகள் மூடப்பட்டமையுடன் ,அவற்றுக்கு சட்ட நடவடிக்கையெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பெரும்பாலான பகுதிகளில் இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அறிவுறுத்தல்களை பின்பற்றாத வகையிலேயே பலர் செயற்பட்டு வந்தமையைக் காணமுடிந்தது. அவர்களுக்கு கடுமையான எச்சரிக்கைகள் வழங்கப்பட்டமையுடன், மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தோற்றுப் போகும் நிலையில் நாடு!

நாட்டின் பொருளாதாரம் மோசமான கட்டத்தை அடைந்து, முழு நாடுமே 'கடன் வாங்கிக் கலியாணம் எனும் கதை போன்ற' அடிப்படையில் நிர்வகிக்கப்படுவதால், இலங்கைத் தீவின் நிலைமை மோசமாகும் எனப் பல தரப்புகளினாலும் ஆரூடம் கூறப்பட்டு வந்தது.

கடந்த ஆண்டு வரைப் பெற்ற இலட்சம் கோடிகள் ரூபாவைத் தாண்டிய கடன்களுக்கான நிலுவைப் பணத்தை – தவணைக் கட்டணத்தை – கடந்த ஆண்டு இறுதியில் செலுத்த முடியாமல் இலங்கை நெருக்கடியை எதிர்கொள்ளும் என்றும் –

அதன் பின்னர் கடன் இறுக்க வகையற்ற நாடாக – தோற்றுப் போன நாடாக – இலங்கை அறிவிக்கப்படும் ஏது நிலைகள் காணப்படுகின்றன என்றும் –

கடந்த வருட இறுதியில் பரவலாகப் பேசப்பட்டது. உலகப் பொருளாதார வல்லுநர்களின் பார்வையில் நிலைமை அப்படித்தான் இருந்தது.

ஆனால், ராஜபக்ஷக்கள் அரசு கடன் தவணையைச் செலுத்துவதற்கு புதிய கடன் உதவியை சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்டது.

கடனை அடைக்கப் புதிய கடன்களை வாங்கிய கதைதான் இது. மேலும் மேலும் கடன் சுமை நாட்டின் கழுத்தை இறுக்கச் செய்யும் நடவடிக்கைதான் இது.

இதனால், கடன் மீளச் செலுத்த முடியாத நாடு என்ற அவப்பெயருக்கு கடந்த வருடம் இலக்காவதினின்றும் இலங்கை தப்பிக் கொண்டது.

கடந்த வெள்ளியன்று அநுராதபுரம் ருவன் வெலிசாயாவில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனை ஒரு சாதனையாகக் கூறி புளகாங்கிதம் அடையத் தவறவில்லை.

கடன் அடைக்க வழியில்லாத நாடாக இலங்கை சிக்கிக் கொள்ளும் என்று பலரும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். அந்த நெருக்கடியை நாம் வெற்றிகரமாகத் தாண்டினோம் என்று தமக்குத் தாமே புகழாரம் சூட்டவும் அவர் தவறவில்லை.

ஆனால், அப்படி மெச்சிக் கொள்ளத் தக்க வகையில் நாட்டின் பொருளாதார நிலைமை இல்லை என்பதுதான் வெளிப்படையான உண்மை.

நாட்டின் அந்நிய செலாவணி சேகரிப்பு முற்றாகக் கரைத்து, அடியோடு வற்றிவிட்டது.

அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதிக்குக் கூட கடன் உறுதிக் கடிதங்கள் (Letters of Cerdit - LCs) திறப்பதற்கு அந்நிய செலாவணிக்கான டொலர்கள் கேட்டு வரவேண்டாம் இலங்கை மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு அறிவித்து விட்டது.

இதனால், வாழ்க்கைக்கு அத்தியாவசியமான மருத்துப் பொருள்களை இறக்குமதி செய்யும் தனது வாடிக்கையாளர்களுக்குக் கூட கையை விரிக்கும் நிலையில் வர்த்தக வங்கிகள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய நெருக்கடி சமயங்களில் வங்கிகள், தத்தமது தரப்புகளிடம் உள்ள அந்நிய செலாவணிக் கையிருப்புகளை, தங்களுக்கு இடையே அவசரம் கருதி தேவைக்கேற்ப பரிமாறிக் கொள்வது உண்டு. அதற்கும் கூட தடை விதிக்கின்றது மத்திய வங்கி என அறிய வந்தது.

*"அந்நிய செலாவணிக் கையிருப்புத் தீர்ந்து பெரும் நிதிப் பற்றாக் குறையினால் நாடு பேரவஸ்தைப்படுகின்றது. மிக மிக அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதிக்குக் கூட கடன் உறுதிக் கடிதங்களை வர்த்தக வங்கிகளிடம் பெறமுடியாத நிலைமையே உள்ளது. வங்கிகள் கைவிரிக்கின்றன. இதனால் இறக்குமதியாளர்கள் – குறிப்பாக அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியாளர்கள் கூட – பெரும் சிரமத்துக்குள் சிக்கியுள்ளனர்."* – என்று கூறுகின்றார் சீனி இறக்குமதியாளர்கள் அமைப்பின் தலைவரும், அத்தியாவசிய உணவுப்பொருள்களை இறக்குமதி செய்வோர் மற்றும் வர்த்தகர் சங்கங்களின் ஆலோசகருமான பி.எம்.அபேசேகரா.

இதேநேரம் நாட்டில் இருந்து சொற்ப அளவான பொருள்களே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அப்படி ஏற்றுமதி மூலம் பெறப்படும் அந்நிய செலாவணியும் நாட்டுக்கு உடனடியாகக் கிடைப்பதில்லை. அவ்வாறு கிட்டும் அந்நிய செலாவணியை, ஏற்றுமதியாளர்கள் தொடர்ந்தும் டொலரிலேயே வைத்திருக்க விரும்புகின்றனர். டொலருக்கு எதிரான பெறுமதி மேலும் அதிகரிக்கும்போது தமது கையிருப்பில் உள்ள டொலருக்கு சந்தை மதிப்பில் அதிக தொகை கிட்டும் என எதிர்பார்த்து ஏற்றுமதியாளர்கள் டொலர் சேமிப்பை மாற்றாமல் வைத்திருப்பதால் அந்த நிதியும் கூட நாட்டின் அந்நிய செலாவணிச் சந்தையில் 'கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாத' கதையாகவே நீடிக்கின்றது.

அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்பவர்களுக்குக் கூட கடன் உறுதிக் கடிதங்களை வழங்க முடியாத நிலையில் வர்த்தக வங்கிகள் இருப்பது தோல்வி கண்ட – தோற்றுப் போன – நாடாக இலங்கையை அறிவிப்பதற்கான முன் ஆபத்த நிலைமைதான் என்பதை மறுப்பதற்கில்லை.

## பேஸ்புக்கில் இழிவுபடுத்தியமையினால் சிலுவையில் அறையப்பட்ட இளைஞர்கள்

கண்டியில் இருவர் கடத்தப்பட்டு கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது என பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளம் ஊடாக நபர் ஒருவரை இழிவுபடுத்தியமை தொடர்பில் கடந்த 25 ஆம் திகதி இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என தகவல் கிடைத்துள்ளது.

கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் அம்பிட்டிய பிரதேசத்தில் மதஸ்தலம் ஒன்றை நடத்திச் செல்பவர் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பிரதான சந்தேக நபர் மற்றும் கடத்துவதற்காக அவருக்கு உதவிய மற்றைய சந்தேக நபர் இதுவரையில் மறைந்திருக்கின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர்கள், சம்பவத்தின் பிரதான சந்தேக நபரின் நண்பர் இருவர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த நண்பர்கள் இருவரையும் வீட்டுக்கு அழைத்து செல்லப்பட்டதன் பின்னர் அம்பிட்டிய பிரதேசத்திற்கு கடத்தி செல்லப்பட்டுள்ளார்கள். பின்னர் சிலுவைகள் போன்று செய்து கடத்தப்பட்டவர்களை அதில் கட்டி கைகளில் ஆணி அடித்து சித்திரவதை செய்துள்ளனர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்த 44 மற்றும் 38 வயதுடைய நபர்கள் இருவர் தற்போது கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கைக்கு நீடிக்கும் ஆபத்து!

இலங்கை கடற்பரப்பில் எரிந்து சேதமாகிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால் இலங்கை சுற்றுசூழலுக்கு ஏற்படும் பாதிப்பு நீடிக்கலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கப்பலால் ஏற்பட்டுள்ள சேதம் வெளிப்புறத்தில் காணப்படுவதை விட கடலின் உட்புறத்தில் மிகவும் கடுமையானதாக இருக்கலாம் என சுற்றுச்சூழல் ஆர்வலர் மெண்டிஸ் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கப்பலில் தீ விபத்து ஏற்பட்டதால் இலங்கை மீன்வளத் துறைக்கு ஏற்பட்ட சேதத்துக்கு 72கோடி ரூபா இடைக்கால இழப்பீடு வழங்க கப்பலின் காப்பீட்டு நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது.

## உள்ளூராட்சி மன்ற நியமன உறுப்பினர்களின் கால எல்லை உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்

### கபே அமைப்பு அறிவிப்பு



உள்ளூராட்சி மன்றங்களுக்கு மேலதிக பட்டியலின் ஊடாக நியமிக்கப்படும் பிரதிநிதிகளுக்கு உத்தியோகபூர்வ கால எல்லை தொடர்பாக உரிய சட்டம் இயற்றப்பட வேண்டும் என கபே அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அண்மையில் மார்ச் 12 இயக்கத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சூம் கலந்துரையாடலின் போதே கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு–

'உள்ளூராட்சி மன்ற புதிய தேர்தல் சட்டத்தின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு முன்னரை விட அதிகமான உறுப்பினர்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இவர்கள் வட்டார ரீதியாக நேரடியாகத் தேர்தலில் போட்டியிட்டும் அதேநேரம், அந்தக் கட்சிகள் பெறக்கூடிய வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் மேலதிக பட்டியல் ஊடாகவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு மேலதிக பட்டியலின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு நியமிக்கப்படக் கூடிய பிரதிநிதிகளை வருடா வருடம் கேட்டு விலகக் கூறி புதிய உறுப்பினர்களை நியமிக்கின்ற ஒரு செயற்பாட்டை சில கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் பின்பற்றி வருகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இதன் காரணத்தால் இவ்வாறு வருடா வருடம் பிரதிநிதிகள் மாற்றப்படுகின்றபோது குறிப்பிட்ட பிரதேசத்துக்கான அபிவிருத்திகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

அதேபோன்று உள்ளூராட்சி மன்றங்களின் கௌரவ உறுப்பினர்களான இவர்களுக்கு தேவையான முழுமையான அனுபவத்தையும் பெற முடியாதவர்களாக இவர்கள் மாற்றப்படுகிறார்கள்.

இந்த செயற்பாட்டின் ஊடாக முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைதான் அதிகரிக்கின்றன.

ஆகவே உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ கால எல்லைகள் தொடர்பாகவும் ஆராய்வது மிகவும் முக்கியமான விடயமாக இருந்து கொண்டிருக்கின்றது' என அவர் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை குறித்த கலந்துரையாடலில் அரசியலில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் மற்றும் கட்சிகளுக்குள்ளும் ஜனநாயகத்தை பின்பற்றுகின்ற செயற்பாடுகளை அதிகரித்தல் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நாடாளுமன்ற செயற்குழுவின் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான விதுர விக்ரமநாயக்க, தாரக பாலசூரிய, தேர்தல் கண்காணிப்பு குழுக்களின் பிரதிநிதிகள், ஏனைய சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட துறைசார் நிபுணர்கள் கலந்து கொண்டார்கள்.

## பால் மா மற்றும் கோதுமை மா விலை அதிகரிக்கும் முடிவில்லை

பால் மா, கோதுமை மா போன்றவற்றின் விலைகளை அதிகரிக்க இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய–வண்ண இது தொடர்பில் அறிவித்துள்ளார்.

மேலும், இந்த பொருள்களை பொதுமக்களுக்கு தற்போதுள்ள விலையில் விற்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே சில நிறுவனங்களுக்கு சலுகைகளை வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்

# குழந்தைப் பேறு இல்லாத தம்பதியருக்கு உதவ ‘தாய்மை’ கருவளச்சிகிச்சை நிலையம் அமைப்பு

**கலையமுதன்**

யாழ்ப்பாணம்,ஜூன் 28

வடக்கு மாகாணத்தில் குழந்தைப் பேறு இல்லாத தம்பதியருக்கு மருத்துவ மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கான ‘தாய்மை’ கருவளச்சிகிச்சை நிலையத்தை அமைத்துள்ளதாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் விளக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு சனிக்கிழமை மாலை வைத்தியசாலையில் நடத்தப்பட்டது. அதில் சங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கை வருமாறு –

பொதுவாக மணமுடித்த தம்பதியினரது மிகப்பெரிய கனவாக இருப்பது ஒரு குழந்தை செல்வத்தையாவது பெற்றெடுப்பது என்பதே ஆகும். இருப்பினும் சில தம்பதியினரால் மருத்துவ, ஆரோக்கிய காரணிகளான பெண்களிடையே பொதுவாக நிலவும் சூழிடலில் காணப்படும் குறைபாடு, கருத்தரித்தல், அல்லது தரித்த கருவை குறித்த காலப்பகுதி வரை பேணுதல் மற்றும் ஆண்களிடையே காணப்படும் விந்து உற்பத்திக் குறைவு போன்றவற்றால் இந்தச் செல்வத்தை அடையமுடியாது உள்ளது.

மேற்குறிப்பிட்ட ஒன்று அல்லது பல மருத்துவக் காரணிகளால் தம்பதிகளில் பெண்ணோ அல்லது ஆணோ அல்லது இருவருமோ பாதிப்புக்குள்ளாகின்றனர். போர்க் காலத்தில் நிலவிய அழுத்தம் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் போன்றவற்றுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்டதன் விளைவாக கூட அவர்களின் சிக்கலான நிலைமை மோசமடையக் காரணமாக அமைந்திருக்கலாம்.

வடமாகாணத்தில் மேற்குறிப்பிட்ட மருத்துவப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு முழுமையான சிகிச்சைகள் மற்றும் கவனிப்பு வசதிகள் காணப்படாத நிலையில், கொழும்பு பகுதியிலுள்ள சில வைத்தியசாலைகளில் அவை காணப்படுகின்றன. வடபகுதியில் உள்ள சாதாரண வருமானம் உடைய ஒருகுடும்பத்தவருக்கு தேவையான சிகிச்சை பெறுவதற்கும், கொழும்பில் தங்குவதற்கும் மற்றும் போக்குவரத்து செலவினங்களுக்கும் மொத்தமாக செலவழிக்கும் தொகை அவர்களின் சக்திக்கு அப்பாற்பட்டது. ஆனால் அநேகமான பாதிக்கப்பட்ட தம்பதியினர் மருத்துவ உதவிக்காக அணுக வெட்கப்படும் நிலை காணப்படுகிறது.

ஆகையால் தங்களுடைய நெருங்கிய சமூகத்தால் தாங்கள் ஒருநகைப்புக்குரியவர்கள் என நினைப்பதைத் தவிர்ப்பதற்காக சிகிச்சை காலத்தில் இரகசியத்தன்மை பேணப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இதற்கு மேலதிகமாக அவர்கள் தங்களுடைய உற்றார் உறவினர்களை விட்டு சில கிழமைகள் செலவழிக்க நேரிடும். மேற்குறிப்பிட்ட பிரச்சினைக ளை ஏற்றுக்கொண்டு அதற்குத் தீர்வாக, மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நன்கு வடிவமைக்கப்பட்ட வசதிகளுடன் தாய்மை செயற்திட்டமையத்தை வடிவமைக்க முன்மொழியப்படுகின்றது.

இந்த நிலையம் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் முதலாம் மாடியில் நோயாளிகளின் இரகசியத்தன்மை கருதி அமையவுள்ளது. இந்தத் திட்டத்துக்கான மூலதனம் 24 மில்லியன் ரூபாவாகும். இதில் அடித்தள உட்கட்டமைப்பு 1.4 மில்லியன் ரூபாவும் சத்திரசிகிச்சை கூடத்துக்கான மருத்துவ உபகரணங்கள் 21 மில்லியன் ரூபாவும் சத்திரசிகிச்சையின் பின்னர் தங்கும் அறைக்கு 1.3 மில்லியன் ரூபாவும் அடங்கும். ஒரு வருடத்துக்கு 20 நோயாளிகளுக்கு பாவித்து முடிக்கக்கூடிய பொருள்களுக்கானதும் (செயற்பாட்டு செலவீனம்) மற்றும் வளர்ப்பு ஊடகம், ஏனையவற்றுக்கான செலவீனம் 15 லட்சம் ரூபாவாகும்.

மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் தேவையான நிதி 255 லட்சம் ரூபாவாகும். இந்த நிலையம் குழந்தைப்பேறற்ற தம்பதியினருக்கு கருவள சிகிச்சைக்குத் தேவையான மருந்து உட்பட (பெண்ணியல்) மொத்த சிகிச்சைகளுக்கும் உதவும். பல்வேறுபட்ட சிகிச்சைகளில் கீழ்காணும் அண்ணளவான செலவீனம் தனித்தனியாக அடங்கும்.

1. வெளியக கருக்கட்டல் – கருவள சிகிச்சைக்கான மருந்துகள், முட்டை பெண்ணிடம் இருந்து சேகரிக்கப்பட்டு ஆய்வு கூடத்தில் ஆணின் விந்து அணுவைக்கொண்டு கருக்கட்டப்பட்ட கருவளர்க்கப்படும். இறுதியில் சத்திரசிகிச்சை கூடத்தில் கரு பெண்ணின் கருப்பையில் வைக்கப்படும் செயன்முறையும், கருவள சிகிச்சைகான மருத்துகளும், சிக்கலான அதிகரித்த விலை கொண்ட நடைமுறையுடன் ஆகும். செலவீனம் 7 லட்சம் ரூபாவாகும். எடுத்துக்காட்டாக வெளியக கருக்கட்டல் சிகிச்சைக்கு அண்ணளவாக ஏழு கிழமைகள் தேவைப்படும்.

2. ஆணிடமிருந்து சேகரிக்கப்பட்டு விந்தணு கழுவப்பட்டு பின்னர் வீரியம் மிக்கதாக்கப்பட்டு அதன் பின்னர் பெண்ணின் கருப்பையில் அவளுடைய முட்டை கருப்பையை அடையும்போது விந்தணு விடப்படும். இதன் செலவு 75 ஆயிரம் ரூபாவாகும்.

3. உள்ளக குழியவுரு விந்து உட்புகுத்தல் – இந்த செயற்பாடு ஆய்வுகூடத்தில் ஆணிடம் இருந்து தேர்வுசெய்யப்பட்ட விந்தணு பெண்ணின் முட்டையின்மையத்தில் உட்புகுத்தப்படும். ஏனெனில் முட்டையின் வெளிக்கவசம் மிகவும் தடிப்பானது அல்லது வன்மையானதால் விந்தணு ஊடுருவி செல்ல முடியாது. இது ஒரு வெளியக கருக்கட்டலுக்கு ஆதரவு அளிக்கும் மேலதிக செயன்முறை ஆகும். செலவீனம் 70 ஆயிரம் ரூபாவாகும்.

மருத்துவர் ஜே.ஜெயந்திரன் அமெரிக்காவில் தொழில்சார் திறமையுடைய நிபுணர். அங்கு ஆய்வுகூட மற்றும் தொழில்நுட்ப ஆதரவு (Andrology) பல பெண்ணிய நோய் மருத்துவ நிபுணர்களுக்கு வழங்கி வருகின்றார். இவர் தாய்மை நிலையத்தை அமைக்கத் தனது தொழில்நுட்ப மற்றும் ஏனைய உதவிகளை செய்ய முன்வந்துள்ளார். இவர் தொடர்ச்சியாக தனது வழிகாட்டல்களை இந்நிலையத்திற்கு வழங்குவார். மருத்துவர் ஜே. ஜெயந்திரன் பற்றியும் அவரது சேவைகளையும் மேலதிகமாக அறிய WWW.androlab.com என்கிற இணையத்தள முகவரிக்கு செல்லவும்.



எவ்வாறாயினும் சாதாரண வருமானம் உடைய தம்பதியினர் ஒருவர் ஐ.வி.எப். (IVF) சிகிச்சைக்குரிய செலவை சமாளித்து முகம் கொடுக்க முடியாத நிலையால், வடபகுதியில் பலர் குழந்தைகளற்ற தம்பதிகளாகக் காணப்படுகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு ‘தாய்மை’ நிலையம் நிதிமூலம் ஒன்றை உருவாக்கி இந்த நிதியிலிருந்து ஒரு வருடத்திற்கு 10 தம்பதியினருக்கு கடன் வழங்கும் செயற்பாட்டை நிர்வகித்து நடைமுறைப்படுத்தவுள்ளது.

அதே வேளை ஒரு குறைந்த வருமானம் உள்ள தம்பதியினருள் ஆண்களிற்கான ஐ.யூ.ஐ. (IUI) சிகிச்சைக்கான நடைமுறைக்கேனும் பணம் செலுத்த முடியாது உள்ளனர்.

ஆகவே மிகவும் குறைந்த சந்தர்ப்பங்களில் வருடமொன்றுக்கு 5 குழந்தைப் பேறு அற்ற தம்பதியினருக்கு இந்த நடைமுறைகளுக்கூடாக இலவசமாக சிகிச்சை வழங்கும்.

இதற்காக தேவைப்படும் நிதி 10 கடன் வசதி மற்றும் 05 இலவச சிகிச்சைக்கானது 73.5 லட்சம் ரூபாவாகும். இதனையும் முன்னர் காட்டப்பட்ட தேவையான நிதி மூலமான 225 லட்சம் ரூபாவையும் இணைக்கும் போது 328.5 லட்சம் ரூபா தேவைப்படும்.

இந் நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழும் தனித்தனியான நலன்விரும்பிகளிடமும் இலங்கையைத் தளமாகக் கொண்டு வாழ்கின்றவர்களிடமும் அதேபோன்று வெளிநாடுகளில் கருணையுடன் இயங்கும் தரும நிறுவனங்கள், ஏனைய நிறுவனங்கள் என்பனவற்றிடமும் இந்தச் செயற்பாட்டை செய்ய மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிதியுதவி வேண்டி நிற்கிறது.

‘தாய்மை’ கருவளச்சிகிச்சை எமது பகுதியில் சனத்தொகை வீதம் குறைவடைந்து செல்கின்றது. திருமணமாகி நீண்ட காலமாக குழந்தைச் செல்வம் கிடைக்காத பல தம்பதிகள் கவலையில் மூழ்கியுள்ளனர். உரிய சிகிச்சை வசதிகள் காணப்படாமையும், இதைப்பற்றி விளக்கம் இல்லாமையும் கூட முக்கிய காரணங்களாக அமையலாம்.

இதனைக் கருத்திற்கொண்டு ‘தாய்மை’ கருவளச்சிகிச்சை நிலையத்தை நிறுவி செயற்படுத்தி வருகின்றோம். இது ஒரு சமூகப் பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில் இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுகின்றமை காலத்தின் தேவையாகும். பல தம்பதிகள் இங்கு சிகிச்சைபெற வருகின்றனர்.

இங்கு இதுவரை சிகிச்சை பெற்றவர்களில் பலருக்கு குழந்தைப் பாக்கியம் கிடைத்துள்ளமை மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாகும். சிகிச்சை பல படிமுறைகளைக் கொண்டது. சிலவற்றை நாம் ஏற்கனவே செய்துகொண்டு வருகின்றோம். பலவற்றை செய்யவேண்டியுள்ளது. அவ்வாறு செய்யும்போது நிறைவான சேவையை வழங்கி எமது இலக்கை அடைந்து எமது பகுதியில் பிறப்பு வீதத்தையும் அதிகரிக்க முடியும்.

எம்மிடம் சிகிச்சை பெற பண வசதியுள்ளவர்கள், முழுமையாக பண வசதியில்லாதவர்கள், எவ்வித வசதியும் இல்லாதவர்கள் என மூன்று வகையினர் வருகின்றனர்.

இவர்களுக்காக நாம் கடன்வசதிமூலம் சிகிச்சை அளிக்கவும், முற்றுமுழுதாக இலவசமாக சிகிச்சையளிக்கவும் திட்டங்கள் தீட்டியுள்ளோம். இந்த நிலையம் கூட்டுறவு வைத்தியசாலை மூளாயின் கட்டமைப்பின் கீழ்க்காணும் ஓர் ஏழு பேர் கொண்ட பாதுகாவலர் மூலம் நிர்வகிக்கப்படும்.

இப்பாதுகாவலர் குழாமில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் பதவி வழி தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர், மருத்துவ அத்தியட்சகர், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பணிப்பாளர் சபையில் நியமிக்கப்படும் பெண்ணோயியல் மருத்துவ வல்லுநர், கலாநிதி ஆறுதிருமுருகன், சமூக ஆர்வலர் ஆகியோர் அடங்குவர்.

இவர்களுடன் சர்வதேசிய ரீதியில் ஆலோசகர்களாக மருத்துவர் பூலோகநாதன் – லண்டன், மருத்துவர் இராஜசுந்தரம் – லண்டன், மருத்துவர் சிறீதரன் – லண்டன், மருத்துவர் தேவநாதன் – லண்டன், மருத்துவர் ஜெயந்திரன் – அமெரிக்கா, மருத்துவர் நித்தியானந்தன் – லண்டன், பரமநாதன் – லண்டன், ஞானநந்தன் – லண்டன், ஹரிசந்திரன் – அமெரிக்கா செயற்படுவர்.

இந்த திட்டத்தைப்பற்றி கூட்டுறவு திணைக்களத்துக்கும் காலத்திற்குக் காலம் தெரியப்படுத்துவதுடன் அவர்கள் மூலம் கணக்குகள் யாவும் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவடையைச் செய்ய 25 போடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக நன்கொடையாளர்கள் பலர் உதவ முன்வந்திருக்கின்றமையும் குறிப்பிட விரும்புவதுடன் மேலும் பலரை நிதியுதவி மூலம் இணைத்துக் கொள்ள விரும்புகின்றோம். அதன்மூலமே எமது நோக்கு வெற்றியடையும்.

இந்தச் செயற்பாட்டை எமது ஒரு சமுதாயக் கடமையாக ஏற்று நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயற்படுவோமாக என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய 24 பேருக்கு கொரோனாத் தொற்று

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களில் 24 பேர் கொவிட் வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி நாட்டில் கடந்த சனிக்கிழமை 1,825 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

அவர்களில் 1,801 பேர் புத்தாண்டுக் கொத்தணியில் பதிவாகியுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் கொவிட் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை, 2 லட்சத்து 51 ஆயிரத்து 751 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 32 ஆயிரத்து 49 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 16 ஆயிரத்து 840 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் கொவிட் தொற்றால் மரணித்தோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 905 ஆக எகிறியுள்ளது.

## தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் சிங்கம் தவிர வேறு விலங்குகளுக்கு கொரோனா பாதிப்பு இல்லை

கொழும்பு, ஜூன் 28

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் சிங்கங்களைத் தவிர, வேறு எந்த விலங்குகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படவில்லையென வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளான ஒரு சிங்கம் குணமடைந்துள்ளதுடன், சீனா என்றழைக்கப்படும் சிங்கம் தற்போது குணமடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் வேறு எந்த விலங்குகளுக்கும் இதுவரை கொரோனாத் தொற்று ஏற்படவில்லையென வனஜீவராசிகள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் விலங்குகளின் பாதுகாப்புக்காகத் தாங்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகின்ற2னர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 100 கர்பிணித் தாய்மார்கள் கொரோனா சிகிச்சையில்!

கொவிட் வைரஸ் தொற்றுக்கு உள்ளான சுமார் 100 கர்ப்பிணித் தாய்மாரும், 50 பாலூட்டும் தாய்மாரும் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் பணிப்பாளர் மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

11 தாய்மார் கொவிட் தொற்றால் உயிரிழுந்துள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

கர்ப்பிணி தாய்மார் அல்லது பாலூட்டும் தாய்மாருக்கு ஒரு நாள் காய்ச்சல் இருந்தாலும் அவர்கள் உடனடியாக வைத்தியசாலைகளுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் சித்ரமாலி டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கொவிட் தொற்று அதிகரித்து வருவதால் கர்ப்பிணித் தாய்மார்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முறையான சுகாதார நடைமுறைகளைச் சரியான முறையில் பின்பற்றிக் கொள்வது அவசியமானதாகும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

# வெலிக்கடை மற்றும் மஹர சிறைச்சாலை கைதிகள் மீண்டும் கூரைமேலேறி போராட்டம்!



வெலிக்கடை மற்றும் மஹர சிறைகளில் உள்ள கைதிகள் மூன்றாவது நாளாக சிறைச்சாலைகளின் கூரைகளில் ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு சனி கைவிடப்பட்ட நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அவர்கள் மீண்டும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என சிறை செய்தித் தொடர்பாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவித்ததை அடுத்து இந்த உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் கைதிகளின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என வலியுறுத்தியும் அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதனையடுத்து, மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற பேச்சு நடந்து வருவதாக சிறை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்காமல் சென்ற வியாழேந்திரன்



மட்டக்களப்பில் அண்மையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழுந்த நபர் பற்றிய முன்னுக்குப் பின் முரணான பல கருத்துக்களை இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்து வருகிறார் எனப் பலராலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் உண்மையில் நடந்த சம்பவம் என்ன என்று அறிவதற்காக ஊடகவியலாளர்கள் இராஜாங்க அமைச்சரை வழிமறித்து வினவ முற்பட்ட போதும் அவர் ஊடகவியலாளர்களை புறக்கணித்து விட்டு அங்கிருந்து சென்றுள்ளார் எனத் தெரியவருகிறது.

ஊடகவியலாளர்கள் வாகனத்தை மறித்தும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அங்கிருந்து வாகனத்தில் நிற்காது சென்றுள்ளார்.

இந்த நிலையில் தமது கேள்விகளுக்கு பதிலளிக்காமல் வியாழேந்திரன் வாகனத்தில் தப்பிச் சென்றமை ஏன் என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 7 | கணிதம் | அலகு 12

**விடைகள்**

**01.**

| | கோவை | கோவையில் உள்ள தெரியாத கணியம் | தெரியாக் கணியத்தின் குணகம் | கோவையில் உள்ள உறுப்புக்கள் | உறுப்புக்களுடன் தொடர்பு பட்ட கணிதச் செய்கைகள் |
|---|---|---|---|---|---|
| | 3a+ 5 | a | 3 | 3a, 5 | X , + |
| | 2x | x | 2 | 2 x | X |
| 1 | 2b - 3 | b | 2 | 2b, 3 | X , — |
| 2 | 11 Z | Z | 11 | 11Z | X |
| 3 | 20 - 9m | m | - 9 | 20, 9m | — , X |
| 4 | p - 10 | P | 1 | P, 10 | — |
| 5 | a + 2 | a | 1 | a , 2 | +, |

**02.**

01. 1/2 a + 4

02. 2m + 15

03. 5a

**03.**

02. 7x + 5y + 7

03. 5x + 2y + 7

04. 3a + 5b + 7

05. 8x + 9k + 9

06. 7P + 5q

**04.**

2. 35

3. 7

4. 13

5. 24

செல்வி ப. லாவண்யா
யா/ முத்துத் தம்பி மகா வித்தியாலயம்

# சமூகத்துக்குள் டெல்டா பரவும் அறிகுறிகள் எதுவும் கிடையாது

## இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவிப்பு

கொவிட் வைரஸின் டெல்டா மாறுபாடு, சமூகத்துக்குள் பரவுவதற்கான அறிகுறிகள் எதுவும் இல்லை என்று இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் ரஞ்சித் படுவந்துடுவ இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை ஐந்து பேர் மட்டுமே இந்த டெல்டா மாறுபாட்டுடன் கண்டறியப்பட்டுள்ளனர்.

எனினும் டெல்டா மாறுபாடு ஏனைய பகுதிகளிலும் பரவுகிறது என்ற அச்சம் நிலவுகின்றது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாறுபாடு முதன்முதலில் கொழும்பு தெமட்டகொட பகுதியில் கண்டறியப்பட்டது.

இந்தநிலையில் டெல்டா மாறுபாடு உள்ளிட்ட கொவிட் வைரஸ் பரவாமல் தடுக்க பொது மக்கள் தொடர்ந்து சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்று ரஞ்சித் படுவந்துடுவ கூறியுள்ளார்.

கொவிட் வைரஸின் மற்ற வகைகளை விட டெல்டா மாறுபாடு தீவிரமாகப் பரவக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## எள் செய்கை



குறைந்த வயதில் (85 நாள்கள்) அதிக நீர் தேவையின்றி குறைந்த செலவில் அதிக லாபம் ஈட்டக்கூடிய பயிர் எள்.

எள் செய்வதற்கு பெப்ரவரி, மார்ச் மாத பருவமே ஏற்றதாகும்.

எள் செய்கைக்கு முதலில் வயலை புழுதிபட உழ வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு தேவையான 2 கிலோ விதையை தேர்வு செய்து விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்துவதற்காக டிரைக்கோ டெர்மாவிரிடி உயிர் பூசான கொல்லி மருந்து ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற விகிதத்தில் விதையுடன் கலந்து விதை நேர்த்தி செய்யவேண்டும்.

விதை விதைத்தவுடன் ஒரு முறையும், 7ஆம் நாள் ஒரு முறையும், விதைத்த 25ஆம் நாள் ஒரு முறையும், பூக்கும் தருணம் ஒரு முறையும், காய் பருவத்தில் ஓரிரு முறையும் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைப்பிடித்தால் எள் பயிரில் குறைந்த செலவில் அதிக இலாபம் பெறலாம்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி



# பொது அறிவு தினசரி ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம். தினமும் பத்துக் கேள்விகள் இப்பகுதியில் இடம் பெறும்.அன்றன்று கேள்விக்குரிய உங்கள் பதில்களைத் தேடிக் கண்டுபிடித்து தயார் செய்யுங்கள்....
அதனை அடுத்த நாள் காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.
கேள்வி பிரசுரமாகி இரண்டாவது நாளில் அக் கேள்விக்குரிய விடைகளும், சரியாக விடையளித்த பத்துப் பேரின் விவரங்களும் பிரசுரமாகும்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

தொகுப்பு:-
எஸ். சாரலன்

## 34ஆவது போட்டிக்குள் நுழைவோமா?

**331.ROM இன் விரிவாக்கம் யாது?**
**332.எள் செய்கைக்கு ஏற்ற மாதங்கள் எவை?'**
**333.2007 ஆம் ஆண்டு சர்வதேச உலகக் கோப்பையை கைப்பற்றிய அணி எது?**
**334.பொசன் தினத்தில் எத்தனை தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டனர்?**
**335.டெல்டா மாறுபாடு வைரஸ் இலங்கையில் எங்கு முதன் முதலில் கண்டறியப்பட்டது?**
**336.உலக சுகாதார அமைப்பின் தலைவர் யார்?**
**337.நடைபெறவுள்ள ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக வீரருக்கு முதல்வரால் அறிவிக்கப்பட்டுள்ள பரிசுத் தொகை எவ்வளவு?**
**338.உலகிலேயே மிக நீளமான நதி எது?**
**339.இலங்கையில் பரப்பளவில் குறைந்த மாவட்டம் எது?**
**340.உலகிலேயே மிகப் பெரிய தீவு எது?**

பெயர் :- ................................................
அடையாள அட்டை:- ................................
முகவரி :- ................................................
மின்னஞ்சல் முகவரி:- ................................
தொலைபேசி இலக்கம்:- ..........................

## 32ஆவது போட்டிக்குரிய பதில்கள்

**311. ஜூன் 22**
**312. கெஹெலிய ரம்புக்வெல**
**313. சாக்ஷி மாலிக் (Shakshi Malik)**
**314. கொகா - கோலா (Coca - Cola)**
**315. மரகத விழா**
**316. அடம் ஸ்மித்**
**317. ஜொஹன்னஸ் கெப்லர்**
**318. தினார்**
**319. சீனா**
**320. அங்கோர்வாட் (கம்போடியா நாடு)**

## 26ஆம் திகதி வெளியான 32ஆவது போட்டிக்கு சரியான விடையளித்தோர் விவரம்8

1.ஆர்.மாலதி - உடுப்பிட்டி
2.ஜெ.வினோஜன் - குடத்தனை
3.எம்.வர்ணபாலன் - யாழ்ப்பாணம்
4.ஜ.கார்த்திகன் - யாழ்ப்பாணம்
5.கே.அனுஷன் - ஏழாலை
6.ரிஸ்மியா ஹமீட் - தெல்தோட்டை (9சரி)
7.எ.சுதர்ஷன் - யாழ்ப்பாணம் (9சரி)
8.ஏ.துஷான் - நீர்வேலி (9சரி)
9.கா.சிறிதரன் - கொழும்பு (8சரி)
10.எஸ்.சிறி இராமசந்திரன் (8சரி)
11.எஸ்.சதுர்ஜினி - அல்வாய் (7சரி)

## மீண்டும் அரசியலுக்குள் வரத் தயாராகும் துமிந்த?

மரண தண்டனை கைதியான துமிந்த சில்வா அண்மையில் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அவர் மீண்டும் அரசியலில் ஈடுபடவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

வார இறுதி சிங்கள பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தியிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் மூலம் அவர் அரசியலுக்கு வரவுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தின் முதலமைச்சர் வேட்பாளராக துமிந்த சில்வா போட்டியிடத் தயாராகியுள்ளார் என செய்தி வெளியாகியுள்ளது.

## கோழிகள் உட்பட செல்லப் பிராணிகளிடமும் கொரோனா வைரஸ் தொற்று பரவும் அபாயம்

வௌவால் மட்டும் அன்றி நாய்கள், பூனைகள் மற்றும் கோழிகளிடம் இருந்தும் கொரோனா வைரஸ் பதிவாகி உள்ளதாக அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

1960 ஆம் ஆண்டு முதல் இவ்வாறான நிலைமை ஏற்பட்டதில்லை என அந்த சங்கத்தின் தலைவர் கால்நடை வைத்தியர் நுவன் ஹேவாகமகே தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் 1960 களில் விலங்குகளில் பதிவாகி இருந்தது. விலங்குகளிடம் இருந்து மனிதர்களுக்கு கொரோனா வைரஸ் பரவியதாக எங்கும் பதிவாக வில்லை. எனவே இந்தச் செய்தியைக் கண்டு மக்கள் அச்சப்படத் தேவையில்லை - எனத் தெரிவித்துள்ளார்.

## நாங்கள் ஒன்றாக இணைந்து ஏதாவது நாட்டுக்கு செய்வோம்!

### மக்கள் சக்தி குமார வெல்கம ரணிலுக்கு பரிந்துரை

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பின்னர், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம அவரை முதலில் வரவேற்றார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், அவருக்கு ஒரு திட்டத்தை முன்வைத்துள்ளார் எனக் கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தொலைபேசி ஊடாக சொல்லப்பட்ட அந்தத் திட்டம் – 'நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக வந்திருப்பது நல்லது, நாங்கள் ஒன்றாக புதியதைச் செய்வோம்' என்று வெல்கம விக்கிரமசிங்கவுக்கு பரிந்துரைத்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பதவியேற்பு விழாவிற்கு ரணில் விக்கிரமசிங்கத் தயாரானபோது, அமைச்சரும், சபைத் தலைவரும், பாடசாலை நண்பருமான தினேஷ் குணவர்தன அவருக்கு வாழ்த்து தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைத் தவிர அரசாங்கத்தில் உள்ள அனைத்து கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சியும் விக்கரமசிங்கவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரண தண்டனையை ஆயுளாக மாற்ற ஆய்வு

மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட 253 கைதிகளின் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுவதில் கவனம் செலுத்தப்படுவதாக இலங்கையின் சிறை சீர்திருத்த இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பான அறிக்கை நீதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

நீதி அமைச்சருக்கு அனுப்பியுள்ள கோரிக்கையில் மரண தண்டனை கைதிகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்க யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒரு கைதி சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைக்கப்படும் போது, அவரை சமூகத்துக்காக உழைக்கக் கூடிய ஒரு நல்ல குடிமகனாக மாற்றுவதே இதன் நோக்கம் என்று அவர் கூறியுள்ளார்.

# இடர்கால சுயகற்றல் மீட்டல் பயிற்சி - 2021

தரம் - 7 | கணிதம் | அலகு 13

## அலகு - திணிவு

திணிவை அளப்பதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட அலகுகளாக மில்லி கிராம் (mg) கிராம் (g) கிலோ கிராம் (kg)

1000mg = 1g
1000g = 1kg

**01. திணிவுகளை கிராமில் எழுதுக?**

01. 1275 mg $= \frac{1275}{1000}$ = 1.275g

02. 2g 850mg = 2850 mg $= \frac{2850}{1000}$ = 2.850g

03. 1475mg = ------------------------------
04. 7020mg = ------------------------------
05. 2g 750mg = ------------------------------
06. 10g 150mg = ------------------------------

**02. பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.**

| | கிராம் | கிராம், மில்லி கிராம் | மில்லி கிராம் |
|---|---|---|---|
| | 1. 4g | 1g 400mg | 1400mg |
| 1. | 9.49g | -------------------- | -------------------- |
| 2. | 3.002g | -------------------- | -------------------- |
| 3. | ------------ | 1g 200mg | -------------------- |
| 4. | ------------ | 3g 12mg | -------------------- |
| 5. | ------------ | ------------ | 2202mg |
| 6. | ------------ | ------------ | 4560mg |

**03. திணிவுகளைக் கூட்டுதல்**

01 . 15g 250mg + 2g 350mg = 17g 600mg

| | g | mg |
|---|---|---|
| + | 15 | 250 |
| | 2 | 350 |
| | 17 | 600 |

02. 10g 420mg + 3g 900mg = --------------
03. 19g 480mg + 30g 12mg = --------------
04. 21g 50mg + 124g 320mg = --------------
05. 80g 250mg + 22g 322mg = --------------

**04. திணிவுகளை கழிப்போம்.**

01. 150g 200mg - 20g 40mg = 130g 160mg

| | g | mg |
|---|---|---|
| | 150 | 200 |
| - | 20 | 40 |
| | 130 | 160 |

02. 210g 150mg - 2g 300mg = --------------
03. 25g 375mg - 18g 210mg = --------------
04. 75g 100mg - 2g 500mg = --------------
05. 12g 10mg - 5g 120mg = --------------

**05. திணிவுகளை பெருக்குவோம்.**

01. 6g 500mg x 5 = 32g 500mg

| | g | mg |
|---|---|---|
| | 6 | 500 |
| x | | 5 |
| | 32 | 500 |

02. 5kg 120g x 12 = --------------------
03. 12kg 100g x 8 = --------------------
04. 300g 525mg x 6 = --------------------
05. 10kg 370g x 15 = --------------------

**06. திணிவுகளை முழு எண்ணால் வகுத்தல்**

01. 1g 750mg ÷ 5 = 350mg

```
     350
5 | 1750mg
    15
     25
     25
      00
       0
       0
```

02. 1kg 200g ÷ 2 = ------------------
03. 4g 140mg ÷ 9 = ------------------
04. 4kg 230g ÷ 3 = ------------------
05. 4kg ÷ 8 = ------------------

**07. 500g எள்ளு 250g சீனி கலக்கப்பட்டு அதிலிருந்து 60 எள்ளுருண்டைகள் தயாரிக்கப்படுகின்றன. ஒரு எள்ளுருண்டையின் திணிவைக் காண்க?**

செல்வி ப.லாவண்யா - யா/ முத்துத் தம்பி மகா வித்தியாலயம்

இவ்வினாத்தாளுக்குரிய விடைகள் நாளையதினம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தள மாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங் காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் 49

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**151. குமார் பொன்னம்பலம் அப்படியெனின், வித்தியாசமாகப் புரிந்து கொள்ளப்பட்டாரா?**

ஆம். ஓரளவுக்கு. நான் அவரை சட்டத்தரணியாக, நண்பனாக, அவர்களது அரசியலில் அக்கறை கொண்டவனாக நன்கு பழகியிருக்கிறேன். அப்படி அவரை நன்கு அறிந்தவர்கள் அவரது கண்ணியமான முறைகளையும், மரியாதையான பழக்க வழக்கங்களையும், யாருக்கும் துன்பமோ தீங்கோ செய்யநினைக்காதமனோபாவத்தையும், பயந்த சுபாவத்தையும் அறிவார்கள். தனக்கு வயது சிறிதில் கூடியிருந்தாலும் 'அக்கா', 'அண்ணை' என்று அழைப்பர். அந்தக் 'கா'விலும், 'ணை'யிலும் அவர் போடும் இழுப்பும் தொடரும் புன்சிரிப்பும் வசீகரமானவை.

ஆனால் அவரது ஆணித்தரமான பேச்சுக்களினால் முக்கியமாக சிங்களத் தரப்பு ஊடகங்கள் அவரை சிங்கள மக்களின் எதிரியாகவும், அவர்களிடையேவாழ்ந்து, உழைத்து, மூலதனங்களால் உறுஞ்சிக் கொண்டு வெளிநாட்டுக்கு ஓடித்திரிந்து, கேவலமாக சிங்களவர்களைப் பற்றித் தூற்றி திரிகிறார் என்று கருத்தாக்கங்கள் செய்தனர்.

பல தமிழ்த் தலைவர்கள், யாழ்ப்பாணத்திலிருந்தும் சிலவற்றை பற்றி வெளிப்படையாக பேசி தொட்டிலை ஆட்டாமல், ஏதோ வரும்போது பார்ப்போம் என்று இருந்தாலும், குமார் அப்படி இருக்கவில்லை. உணர்ச்சிகளும், அவரது உத்வேகமும், அநீதிக்கு எதிரான துடிப்பும், ஒன்று பிழை என்றால் அது பிழைதான் என்று முகத்தில் அடித்தாற் போல் சொல்லும் தன்மையும் அவரை பல முறை பிரச்சினைகளுள் உட்படுத்தியுள்ளன. அவர் பிரச்சினைகளைத் தேடி உருவாக்கப் போகின்றவர் அல்லர். ஆனால் அவரது உணர்ச்சியும் இயல்பும் அவரை அங்கே கொண்டு சென்றன.



குமார் பொன்னம்பலம்

அவருக்குப் பல தடவைகள் இப்படியானவை, சலசலப்பைத் தந்தாலும் பயனளிக்காது போய்விடும் என்று சொல்லப்பட்டாலும் குமாருக்கு கபடத்தன்மையும், ஒன்றை உடனடியாக அந்த நிமிடமே செய்து முடிக்காமல், சந்தர்ப்பத்திற்காகக் காலம் தள்ளி போடுவதும் பிடிப்பதில்லை. இவை எல்லாம் அவரை 'பயங்கரவாதிகளின் பிரதிநிதி' என்று அரச மட்டங்களினாலே கருத்துக்கள் ஏற்பட வழிவகுத்தன. அவரது கொலையின் முடிச்சு தொடர்ந்து கொண்டே இருந்த இனப்படு கொலைகளால் இதுவரை அவிழ்க்கப்படவில்லை.

குமார் போல் சமகாலத்தில் அவருடன் இணைந்து செயல்பட்டவர் இன்னுமொருவர். அவர் வணக்கத்துக்குரிய மதகுரு. அவரும் அவரது பரப்புரைகளுக்காக சிங்கள இனவாதிகளாலும் அவரது சிங்கள மத பீடங்களினாலுமே பிரச்சினைக்குரியவராகப் பார்க்கப்பட்டார்.

**152. அவர் யார்?**

அவர் கத்தோலிக்க திருச்சபையில் வண பிதாவாகப் பணியாற்றி பின் ஜேர்மனியில் முதுகலைப்பட்டம் பெற்ற டாக்டர் எஸ்.ஜே.இமானுவேல் (Rev.Dr.S.J. Emmanuel) சமகால நிகழ்வுகளில் Global Tamil Forum(GTF) என்ற அமைப்பின் தலைவராக இருந்தவர். முதுகலைப்பட்டத்தின் பின் ஜேர்மனியில் தங்க வசதிகளிருந்தும், 1983 இன் கலவரங்களால் வேதனையுற்று நாட்டிற்கு திரும்பி பாதிக்கப்பட்டோருக்கான பணிகளில் திருச்சபை ஊடாக ஈடுபட்டவர். அவர் வெளிநாடு செல்லுமுன் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் அம்பிற்றியாவில் (Ampitiya) இருந்த குருக்கள் பயிற்சி கலாசாலையில் Seminary பேராசிரியராக பல சிங்கள குருமாரையும் பயிற்றுவித்தவர். அவர்களுடன் இணைந்து அவர்கள் தளங்களுக்கூடாக, சிங்கள மக்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை, ஓரளவுக்கு கத்தோலிக்க மதத்தை பின்பற்று வோரிடையேயாவது உண்டாக்கலாம் என்று பல கருத்தரங்குகளும் பேச்சுக்களும் நடத்தியவர். அவற்றின் ஊடாக சிங்கள இனவாதம் மதங்களையும் கடந்து ஆழமாக ஊறியிருப்பதை உணர்ந்தார். அதே சமயம், தமிழ்ப்பகுதிகளில் வளர்ந்த ஆயுதம் தாங்கிய இயக்கங்களின் வளர்ச்சியையும் அவற்றினிடையே இருந்த போட்டிகளையும், அவற்றால் அழிந்தவர்களையும், அழிக்கப்பட்டவர்களையும், அழித்தவர்களையும் அறிந்தவர்.

இடப்பெயர்வுகளால் மக்கள்பட்ட உபாதைகளை அறிந்து, உணர்ந்து அவர்களிடையே அவர்களின் தேவைகளுக்கும் விடிவுக்கும் உழைத்தவர்.

இவையும் அவர் தனது பேச்சுக்கள், கட்டுரைகள், வெளியீடுகள் ஊடாகத் தெரிவித்த கருத்துக்களும், பிரபாகரனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அவர் மேல் பெரும் அபிமானத்தை வளர்த்தன.

அவரும், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் விடிவிற்காகத் தொடர்ந்து போராடுகிறார்கள், 1977 இல் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு மக்கள் கொடுத்த ஆணை தற்சமயத்திற்கு விடுதலைப் புலிகளின் கைகளில் மக்களால் பாரப்படுத்தப்பட்டுள்ளது, நீதிக்காகவும் சமாதானத்திற்காகவும் அவர்களே போராடுகிறார்கள் எனவும், தான் அந்த நீதிக்கும் சமாதானத்திற்கும் குரல் கொடுக்கிறேன் என்ற நிலைப்பாட்டை வலுப்படுத்தினார்.

இவற்றினால் சிங்கள இனவாதிகளிடையே எழுந்த எதிர்ப்புகள் இவரை பழையபடி ஜேர்மனி செல்ல வைத்தன. அதனைத் தளமாகக் கொண்டு சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து நீதிக்காகவும் சமாதானத்திற்காகவும் பலத்த குரல் கொடுத்தார்.

**153. சிங்கள இனவாதிகளின் அவ்வளவு வெறுப்புகளுக்காக அவர் அப்படி என்ன செய்தார்?**

ஜேர்மன் தளத்திலிருந்து சர்வதேச அமைப்புக்கிடையும் தமிழர் புலம் பெயர் மட்டங்களிடையும் தமிழருக்கெதிரான அட்டூழியங்களை எடுத்துரைத்தார். தமிழர் புலம்பெயரமைப்புக்கள் விடுதலைப் புகளின் ஆதரவாளர்களாகவே இயங்கின. அத்தோடு குமார் பொன்னம்பலத்துடன் சேர்ந்து ஜெனிவாவில் பணியாற்றியமை போன்றவை அவரை விடுதலைப் புலிகளின் முகவராகவே சிங்கள ஊடகங்களால் பார்க்கப்பட்டது. 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பது போல் இவர்கள் மனித உரிமைகள் அட்டூழியங்களைப் பற்றி பேசினார்கள் என்ற வித்தியாசத்தை கண்டு கொள்ள வில்லை. விடுதலைப் புலிகளின் சிங்கள மக்களுக்கு எதிரான வன்முறைகளையும் அட்டூழியங்களையும் நியாயப்படுத்தினார்களே என்று ஆத்திரப்பட்டனர். அவரை அறிந்த, அவரது திருச்சபையின் சிங்கள அங்கமும், நியாயத்தை அறிந்த சிங்கள மக்களும் இதனை விளங்கிக் கொண்டார்கள். ஆனால் தமிழ் பக்கம் போல, அவர்களாலும் எதிர்க் குரல்களால் அப்படியான செல்நெறிச் சிந்தனைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை.



வண. பிதா இமானுவல்

அவர் நீதிக்காகவும் சமாதானத்திற்காகவும் கொடுத்த பலத்த குரல் அவரை பாதிரியார் ஆடை தரித்த கபாட பூபதி என்றும், குருசுக்குப் பதிலாக சயனைட் குப்பியை கழுத்திலும், ஏ.கே.47 உடன், பிரபாகரனை தனது மக்களுக்காக வந்த யேசுகிறிஸ்து என்று கொண்டாடுபவர் என்றும் கேவலமாக சிங்கள தீவிரவாதிகளும் – ஏன் ஆட்சியாளரின் சிங்கள ஆங்கிலப் பத்திரிக்கைகளுமே – தகவல் தந்தன.

(வளரும்....)

**ஜனனி தேவானந்த்**
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை 26

## Online Classroom

சென்ற வாரம் மிகவும் பரப்பரப்பாகப் பேசப்பட்ட விடயம் மெய்நிகர் வகுப்பறையை மேலும் வலுச்சேர்ப்பதற்காக வெளியாகியிருக்கின்ற விண்டோஸ் 11 பற்றியதாகவே இருந்தது. ஜூன் 24 ஆம் திகதி இணைய வழி நிகழ்வொன்றின் மூலம் விண்டோஸ் 11 அறிமுகமாகியிருந்தது.

கணனி எங்கள் வாழ்க்கையில் மிகவும் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு நேரத்தில், விண்டோஸ் 11 மெய்நிகர் தளத்தை இலகுவாக நெருங்குவதற்கான வசதிகளை கொண்டதாக வெளிவந்திருக்கின்றது.

இன்று பெருந்தொற்றுக்காலத்தில் இடர்மிகு சூழலில் கணனிப் பயன்பாடு மிகஅதிகரித்துள்ளது. இதற்கு மேலும் வலுச்சேர்க்கிறது விண்டோஸ் 11. கணனி யுகத்தில் உலகின் கண்டுபிடிப்புக்கான ஒரு வியத்தகு விடயமாக விண்டோஸ் எப்போதும் உள்ளது. இது உலகளாவிய வணிகங்களின் முதுகெலும்பாக இருக்கிறது. இன்றைய இணையத் தொடர்பாடலுக்கு விண்டோஸ் அளப்பரிய பணியையாற்றி வருகின்றது. கணனி யுகத்தக்குள் பிரவேசிக்கும் ஒருவர் விண்டோஸைத் தொடாமல் இருக்கமுடியாது. பலர் முதல் மின்னஞ்சலை எழுதியது, முதல் கணனி விளையாட்டை விளையாடியது, முதல் குறியீட்டை எழுதிய இடம் இது. விண்டோஸ் என்பது ஒரு மென்பொருள். இது பயனர்கள் தாம் விரும்பியதை உருவாக்க, இணைக்க, கற்றுக்கொள்ள மற்றும் அடையச் செல்லும் இடமாகும் - இன்று ஒரு பில்லியனுக்கும் (நூறு கோடிக்கும்) அதிகமான மக்கள் நம்பியுள்ள ஒரு தளமாக இது காணப்படுகின்றது.

கொவிட் - 19 உலகத்தை ஆட்டிப்படைத்த கடந்த 18 மாதங்கள் உலகம் முழுவதும் கணினிகளை பயன்படுத்துவதில் நம்பமுடியாத மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. பொதுவாகக் கணனியை எங்கள் வாழ்க்கையில் ஒருபகுதியாக கொண்டிருப்பதிலிருந்து முழு வாழ்க்கையையும் கணனிதான் என்ற நிலையில் இருக்கிறோம்.

இன்றைய இந்த மாற்றங்கள் கூட்டங்கள், வகுப்புகள் மற்றும் காரியங்களைச் செய்ய கணனியொன்றே தஞ்சமென்றாகி வருகிறது. ஏன் நாங்கள் நண்பர்களுடன் விளையாடுவதற்கும், எங்களுக்கு பிடித்த நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும், மிகவும் அர்த்தமுள்ள வகையில், ஒருவருக்கொருவர் இணைப்பதற்கும் கணனி தேவவையாகிறது. இந்த செயல்பாட்டில், அலுவலக தேவைகள், உதவிகளுக்கான உரையாடல், உடற்பயிற்சிகளும், மகிழ்ச்சியான நேரங்களும் விடுமுறை கொண்டாட்டங்களும் - டிஜிட்டல் முறையில் உருவாக்கப்படுகின்றன. இங்கு மிகவும் வியப்பான விடயமென்னவென்றால், நாங்கள் பார்த்த மற்றும் உணர்ந்த கணினியின பயன்பாடு மாற்றம் அடைகிறது. இப்போது நடைமுறையில், செயல்பாட்டிலிருந்து தனிப்பட்ட மற்றும் உணர்ச்சிபூர்வமான ஒன்றுக்கு மாறுகிறது. புதியதை உருவாக்க, கற்றுக் கொள்ள, விளையாட மற்றும் மிக முக்கியமாக, எல்லா புதிய வழிகளுக்கும் செல்லவதற்கான கணனி இணைப்பு தேவையாகவுள்ளது. இதனை புதிதாக அறிமுகமாகியுள்ள விண்டோஸ் 11 வலுவாக்குகின்றது, நெருக்கமாக்குகிறது. இந்தப் படைப்பு எளிமைக்காக மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.




பயனர்களின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், படைப்பாற்றலை ஊக்குவிப்பதற்கும் பயனர் அனுபவத்தை எளிமைப்படுத்தியுள்ளது.

**விண்டோஸில் Android apps**

மைக்ரோசொவ்ட் முதல் முறையாக Android appsகளை விண்டோஸில் கொண்டு வந்திருக்கிறது. இந்த ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கி, மைக்ரோசொவ்ட் ஸ்டோரில் ஆண்ட்ராய்டு apps களை மக்கள் அணுகலாம். மேலும் அவற்றை அமேசான் ஆப்ஸ்டோர் மூலம் பதிவிறக்கம் செய்ய முடியும். அடோப் கிரியேட்டிவ் கிளவுட், டிஸ்னி 10, டிக்டோக், சூம் மற்றும் மைக்ரோசொவ்ட் டீம்ஸ், விசுவல் ஸ்டுடியோ போன்றவற்றையும் விண்டோஸ் 11 மைக்ரோசொவ்ட் ஸ்டோரில் காணலாம். மேலும் மைக்ரோசொவ்ட் உருவாக்கிய apps களான நோட்பாட் மற்றும் பெயிண்ட் கூட அதில் சேர்க்கப்பட்டுள்ளது.




**சிறந்த பல்பணி அனுபவம்**

விண்டோஸ் 11 புதிய ஸ்னாப் தளவமைப்புகள், ஸ்னாப் குழுக்கள் மற்றும் டெஸ்க்டொப்புகளையும் பலதரப்பட்ட பணிகளுக்கு சிறந்த வழியை வழங்குகிறது.

இங்குள்ள புதிய அம்சங்கள் windows யினை ஒழுங்கமைக்கவும், திரை வடிவமைப்பை மேம்படுத்தவும் உதவும் வகையில் உள்ளது. இதன் மூலம் பார்வைக்கு நன்றாக இருக்கும் தளவமைப்பில் தேவையானதைச் சுலபமாகப் பார்க்க முடியும். பயனர்கள் தனித்தனி டெஸ்க்டொப்புகளை உருவாக்கி, அவர்களின் விருப்பப்படி தனிப் பயனாக்க முடியும். எடுத்துக்காட்டாக, வேலை, கேமிங் அல்லது பாடசாலைக்கு தனித்தனி டெஸ்க்டொப் வைத்திருக்கலாம்.



**Widgets**

செய்தி, வானிலை, காலண்டர், செய்ய வேண்டிய பட்டியல் மற்றும் உங்கள் சமீபத்திய புகைப்படங்களைக் காண்பிக்க உங்கள் டெஸ்க்டொப்பின் முன் வரக்கூடியவாறு புதுப்பிக்கப்பட்ட விட்ஜெட்களை விண்டோஸ் 11 வழங்குகிறது. எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் பார்க்க விரும்பினால் விட்ஜெட்களை முழுத் திரையில் காணவும் முடியும். பயனர்கள் எப்போது வேண்டுமானாலும் விட்ஜெட்டுகளைச் சேர்க்கலாம் அல்லது அகற்றலாம்.

பொதுவாக செய்தி, வானிலை அல்லது அறிவிப்புகளைச் சரிபார்க்க தொலைபேசிகளை எடுக்கத் தேவையில்லை. இப்போது, உங்கள் டெஸ்க்டாப்பில் இருந்து நேரடியாக இதேபோல் வடிவமைக்கப்பட்ட காட்சியைத் திறக்கலாம்.

கேமிங் ஆர்வலர்களுக்கான கவர்ச்சியான மாற்றங்கள் அறிமுகமாகியுள்ளன.

விண்டோஸ் 11 சிறந்த பி.சி கேமிங் அனுபவங்களை வழங்குகிறது. அதாவது நீங்கள் ஒரு விளையாட்டாளராக இருந்தால், விண்டோஸ் 11 உங்களுக்காக உருவாக்கப்பட்டது. இன்று, உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கான மக்கள் விண்டோஸில் விளையாடுகிறார்கள் மற்றும் விளையாட்டின் மூலம் அன்புக்குரியவர்கள் மற்றும் நண்பர்களுடன் மகிழ்ச்சியையும் தொடர்பையும் பேணுகிறார்கள். விண்டோஸ் 11 உங்கள் கணினியின் வன்பொருளின் முழுத் திறனையும் பயன்படுத்தி உங்களுக்காக வேலை செய்து சில சமீபத்திய கேமிங் தொழில்நுட்பத்தை தருகிறது.

ஆகவே நிறைவாக விண்டோஸ் 11 என்பது விண்டோஸின் அடுத்த பரிணாமமாகும். இது விண்டோஸ் 10 முதல் விண்டோஸ் இயக்க முறைமைக்கான மிக முக்கியமான புதுப்பிப்பாகும். விண்டோஸ் 11 இன்றைய வேலைச் சூழலை ஆதரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

விண்டோஸ் 11 விண்டோஸ் 10 இன் அதே அடித்தளத்தில் கட்டப்பட்டுள்ளது. எனவே புதுப்பிப்பு மற்றும் சாதன நிர்வாகத்திற்கான கருவிகளில் நீங்கள் செய்த முதலீடுகள் முன்னோக்கி கொண்டு செல்லப்படுகின்றன. விண்டோஸ் 11 ஆனது விண்டோஸ் 10 உடன் வழங்கப்பட்ட apps உடன் பொருந்தக்கூடியதாவுள்ளது.

**விண்டோஸ் 11 இனை எவ்வாறு பெறுவது ?**

ஏற்கனவே கணனியில் உள்ள விண்டோஸ் 10 இயங்கும் தகுதியான சாதனங்களுக்கு மேம்படுத்தலாக விண்டோஸ் 11 வழங்கப்படும். இது 2021 ஆண்டின் பிற்பகுதியில் கிடைக்கும் விண்டோஸ் 11 க்கு தகுதியான புதிய சாதனங்களிலும் கிடைக்கும். விண்டோஸ் 10 அம்ச புதுப்பிப்புகளுக்கு இன்று பயன்படுத்தும் அதே, பழக்கமான சேனல்கள் மூலம் விண்டோஸ் 11 கிடைக்கும்.

உரிமத்தைப் பொறுத்தவரை விண்டோஸ் 10 சாதனங்களுக்குத் தேவையானதைத் தாண்டி விண்டோஸ் 11 க்கு தனிப்பட்ட உரிமத் தேவைகள் எதுவும் இல்லை. ஆக, மைக்ரோடொவ்டின் அடுத்த தலைமுறை விண்டோஸ் அறிமுகமாகியுள்ளது.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவுக்கு எதிரான போராட்டம்

## ஓர் அனுபவத் தொடர்

எந்திரி நவரட்னம் சுதாகரன்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்,
முல்லைத்தீவு பிராந்தியம்.

அங்கம் 10

### தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்தவாறு அலுவலக கடமைகள் (Office Routine work via Zoom Conference)

.நான் தங்கியிருந்த போது Smart Phone பாவிக்க அனுமதிக்கப்பட்டமையினால் அதை பயன்படுத்தி ZOOM செயலியூடாக தொடர்பாடல்களினை மேற்கொண்ட அதே வேளை Viber, Whatsapp Chat Groups களினூடாக Messages அனுப்பி எனது அலுவலக வேலைகள் (WFH) முறைமையில் தொடர்ந்து இந்நிலையத்திலும் தொடர்ந்து மேற்கொண்டேன். நான் எங்கிருந்து இதை மேற்கொள்கிறேன் என்பதனை ஏனையவர்கள் அறியாதவகையில் எனது தொடர்பாடல்கள் அமைந்திருந்தன. அத்துடன் பலர் எனக்குத் தொழில் சம்பந்தப்பட்ட பயிற்சி நெறி, கருத்தரங்கு போன்றவற்றிலும் கலந்து கொண்டேன். IESL இனால் நடாத்தப்பட்ட CPD Event மற்றும் முல்லை அரச அதிபர் மற்றும் விவசாய அமைச்சின் செயலாளரது தலைமையில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான WFP அனுசரணையில் நடாத்தப்பட்ட கருத்தரங்கிலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

### கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கான தள வரைபடம்

நான் கோப்பாய் கொரோனாத் தனிமைப்படுத்தல் நிலையத்திற்குச் சென்று தங்கியிருக்கும் போது இந்த இந்த பெருந்தொற்று நிலைமையை சரியான முறையில் கையாள வேண்டும் என எண்ணி , ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்து, இக்காலப்பகுதியில் பயன்தரக்கூடிய செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தி மற்றவர்கள் பாராட்டக்கூடியவாறு செயற்பட்டு புதிய மனிதராக வெளிச்செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கி அப்பிரத்தியேகமான தனிமைப்படுத்தல் நிலையத்தில் சிறிய மாற்றங்களை ஏற்படுத்த விரும்பினேன்.

அதில் எனக்கு முதல்விடயமாக தோன்றியது, வெவ்வேறு இடங்களில் இருந்து இங்குவரும் தொற்றாளர்கள் தமது தங்குமிட ஒழுங்கமைப்பை இலகுவாக அறிவதற்கும் தனிமைப்படுத்த நிலைய கயிற்றினுட்புறம் வந்தவுடன் எவ்வாறு நான் இடர்பட்டேனோ அதே போல அவர்களும் இடர்படக்கூடாது என்ற எனது அனுபவத்தின் அடிப்படையில் இதில் மாற்றத்தை ஏற்படுத்த தோன்றியது.

அந்த எண்ணம் மேலோங்க நிலையத்தின் தள வரைபடத்தை காட்சிப்படுத்துவதற்கு திட்டமிட்டமையுடன் அதன் மூலமாக தனிமைப்படுத்தல் நிலையத்தின் அமைப்பு மற்றும் பிரதான கட்டுமானங்களை இலகுவாக அறிந்து தமது இடங்களுக்குச் செல்லும் வகையில் Layout ஐ தயாரிக்க எண்ணினேன். மேலும் தனிமைப்படுத்தல் நிலையத்தில் நிலைய அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் அமைவு வரைபடம் (Layout Pan) ஒன்றினையும் வடிவமைத்து கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தின் கீழ் ஜீன் 02 அன்று காட்சிப்படுத்தினேன். அதற்கு ஒத்துழைத்த கிளிநொச்சி நகர ரோட்டறிக் கழகத்தினருக்கு எனது அன்பும் நன்றியும் உரித்தாகுக. புதிதாக ஒருவர் தனிமைப்படுத்தல் நிலையத்தினுள் உள்நுழையும் போது இவ் அமைவு வரைபடத்தின் பிரகாரம் சுயமாக செயற்பட வழிவகுக்கும் என்பதில் எனக்கு எந்தவித ஐயமும் இல்லை .

நான் இந்த சிகிச்சை நிலையத்திற்கு வந்து இடங்களைக் கண்டுபிடிப்பதற்கு எவ்வளவு சிரமப்பட்டேன் என்பதனை நான் எப்போதும் நினைத்ததுண்டு. அதிலும் மிகவும் நலிவுற்ற ஒரு தொற்றாளர் எவ்வாறு தனது இருப்பிடத்தினை ஒருவரது உதவியுமின்றி கண்டுபிடிப்பது என்பது மிகவும் கடினம் என்பதனை நன்கு உணர்ந்தேன்.

நான் பொறியியலாளராக இருப்பதனால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் இலகுவாக இங்கு வந்தவுடன் சிகிச்சை நிலையத்தினை பற்றி ஓர் அடிப்படை விடயங்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு வரைபடத்தினை உருவாக்கி அதை பிரதான நுழைவாயிலில் எல்லோரும் பார்க்க கூடிய வகையில் நான் போவதற்கு முன்னர் காட்சிப்படுத்த வேண்டுமென்று எண்ணினேன். இது மிகவும் கடினமான வேலை
















என்பதனை நான் நன்கறிவேன். இதைச் செய்ய வேண்டுமென்று வைத்தியசாலை நிர்வாகம் ஒரு ஆண்டுக்கு மேலாக முயற்சித்த போதிலும் பயனளிக்கவில்லை என ஒரு வைத்தியர் கூறியதனை எனது காதால் கேட்டிருக்கின்றேன்.


எனினும்நான்திட்டமிட்டவாறுநான்வெளியேறும் முன்னர் செய்து அங்குரார்ப்பணம் செய்ய நடவடிக்கை எடுத்தேன். அந்தவகையில் இதற்கான தரவுகளை நான் சேகரித்தேன்.

இது இங்கே உள்ளே உள்ளவர்களால் மட்டுமே முடியும். அதே போல் Google Earth ஊடாக தொழில்நுட்பஉத்தியாகத்தரின்உதவியுடன்கட்டடங்களினை Locate பண்ணினேன்.

அத்துடன் வைத்தியர்கள் மூலமாக கட்டடங்கள் பாவிக்கப்படும் முறை/ஒழுங்கு என்பனவற்றையும் தெரிந்து கொண்டேன். அதே போல எனது சகோதரி ஏலவே இங்கு சிகிச்சை நிலையத்தில் தங்கிச் சென்றவர் என்பதுடன் இக்கல்லூரியிலேயே தனது Diploma கல்வியினையும் நிறைவு செய்தவர். அவரிடமிருந்து நிறைய விடயங்களினைப் பெற்று தரவுகளினை ஒழுங்குபடுத்தினேன். அதன் அடிப்படையில் இதை Board செய்யும் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஓர் Designer ஊடாக எனது இலக்கினை 03 நாள்கள் இரவு பகலாக தொடர்ந்து வேலை செய்து சிறப்பாக இக்காரியத்தினை செய்து முடித்து ஓர் சிறப்பான நிகழ்வாக நடாத்தியிருந்தேன். வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய ஊழியர்கள் மற்றும் இதற்கு நிதி அனுசரணை செய்த அனைத்து அன்பர்களாலும் குறிப்பாக இச்செயல்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வை நெறிப்படுத்தி இதை செவ்வனே நிறைவேற்றிய வைத்தியர் S. சத்தியமூர்த்தி அவர்களால் இத்திட்டம் முழுமை பெற்றது.

(தொடரும்.....)













# ஸ்கந்தாவின் புகழ் பூத்த அதிபர் சிவாஜியின் பெயர் வீதிக்கு சூட்டல்



வலிகாமம் தெற்கு பிரதேச மக்களின் வேண்டுகோளுக்கு அமைய வலி தெற்கு பிரதேச சபையின் ஏகோபித்த தீர்மானத்தின் அடிப்படையில் ஆளுனரின் அனுமதியின் பிரகாரம் உடுவில் களவியாவத்தை எனும் வீதி'அதிபர் சிவாஜி வீதி' என பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

இந்த வீதி திறக்கும் நிகழ்வு சூம் தொழில்நுட்பத்தினூடாக பிரதேசசபையின் உறுப்பினர் தவராஜா துவாரகன் தலைமையில் இடம்பெற்று அதிபர் சிவாஜியின் பாரியார் யாழ்.பல்கலைக்கழக ஆங்கில துறை விரிவுரையாளர் திருமதி கருணா சிவாஜி உத்தியோகபூர்வமாக வீதியைத் திறந்து வைத்தார்.

இதற்கான நேரடிகண்காணிப்பு ஆராய்வு கடந்த சனிக்கிழமை இதனை ஒழுங்மைத்து செயற்படுத்திய பிரதேசசபை உறுப்பினர் தவராஜா துவாரகனால் மேற்கொள்ளப்பட்டது.




# சிறைச்சாலைக் கைதிகளைப் பயன்படுத்தி உற்பத்திகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகள்

## மட்டக்களப்பில் ஆரம்பம்



சிறைத் தண்டனை அனுபவித்துவரும் கைதிகளைப் பயன்படுத்தி உற்பத்திகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகள் மட்டக்களப்பில் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நாட்டை சுபீட்சத்தை நோக்கி கொண்டு செல்லும் ஜனாதிபதியின் செயற்றிட்டத்துக்கமைய சிறைச்சாலையிலிருந்து விவசாய நிலத்துக்கு சேதனப் பசளை உற்பத்தி மற்றும் காய்கறி உற்பத்தி' எனும் தொனிப்பொருளில் இந்த நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சொந்தமான 23 ஏக்கர் பண்ணையில் பயிர் செய்கைகள் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி என்பன இடம்பெறவுள்ள இடத்தை அமைச்சர் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்டோர் நேரில் பார்வையிட்டமையுடன், இந்த வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தனர்.

குறித்த நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் துசார உப்புல்தெனிய தலைமையில் திருப்பெருந்துறையிலுள்ள சிறைச்சாலைக்குச் சொந்தமான பண்ணையில் நடைபெற்றது.

இதில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக் கைதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தை, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் பிரதேச அபிவிருத்தி குழுவின் பிரதித் தலைவர் பா.சந்திரகுமார், மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.எல்.விஜயசேகர மற்றும் அமைச்சர்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# சேதனப் பசளைகளின் இறக்குமதி தற்காலிகமாக இடை நிறுத்தம்!

**( வி.ரி.சகாதேவராஜா)**

சேதனப் பசளைகளை இறக்குமதி செய்வதை தற்காலி கமாக இடைநிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள தாக விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.எம்.டபிள்யூ. வீரகோன் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவையில் அரசாங்கத்துக்குச் சொந்தமான பசளை இறக்குமதி நிறுவனங்கள் மூலம் 2021/2022 பெரும்போக நெற்செய்கையின் 500,000 ஹெக்டேயர்கள் மற்றும் ஏனைய பயிர்கள் 600,000 ஹெக்டேயர்களுக்குத் தேவையான பசளை மற்றும் கனிமங்கள் தேவைகளை சர்வதேச போட்டி விலைமனு பொறிமுறையைப் பின்பற்றி இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதியளித்தது.

ஆயினும், சேதனப் பசளை இறக்குமதி மூலம் இலங்கைக்கு மாற்றமான நுண்ணுயிர்கள் நாட்டிற்குள் நுழையும் ஆபத்து உள்ளிட்ட பல்வேறு காரணிகளைக் கருத்திற் கொண்டு, தற்போது சேதனப் பசளைகளை இறக்குமதி செய்வது தற்காலிகமாக இடைநிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.எம்.டபிள்யூ. வீரகோன் தெரிவித்தார்.

இதேவேளை, ஒரு ஹெக்டயருக்கான (2 1/2 ஏக்கர்) சேதனப் பசளையை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 10,000 பணத்தை செலுத்த தீர்மானித்துள்ளதாக, விவசாய அமைச்சு அண்மையில் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# டெல்டா பிளஸ் திரிவு வைரஸின் அறிகுறிகள்

கொரோனா வைரஸ் தொற்றின் அறிகுறிகளாக இல்லாத பல அறிகுறிகள் டெல்டா பிளஸ் திரிவு வைரஸில் காணப்படுகின்றன என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாறுபாட்டால் பாதிக்கப்படுபவர்களுக்கு அதிக அளவிலான சோர்வு ஏற்படுகின்றது.

இதற்கு முன்னர் இருந்த மாறுபாடுகளைவிட டெல்டாபிளஸால் பாதிக்கப்படுபவர்களுக்கு மிகவும் வேகமாக உடல்நிலை மோசமாவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

டெல்டா பிளஸ் மாறுபாட்டில், வழக்கமான உலர்ந்த இருமல், காய்ச்சல், சோர்வு, உடல் வலி, தோல் வெடிப்பு, கால்விரல்கள் மற்றும் கைவிரல்களின் நிறமாற்றம், தொண்டை வலி, வெண்படல அழற்சி, சுவை மற்றும் வாசனை இழப்பு, வயிற்றுப்போக்கு மற்றும் தலைவலி, மார்பு வலி, மூச்சுத் திணறல், பேசுவதில் சிரமம், வயிற்று வலி, குமட்டல், பசியின்மை, வாந்தி, மூட்டு வலி, காது கேளாமை போன்ற அறிகுறிகள் காணப்படும் என ஆரம்ப ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

இதனைப் பாதுகாக்க எடுக்கக்கூடிய சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்.

தனி மனித இடைவெளி, இரட்டை முகக் கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல், வெளியில் செல்வதைத் தவிர்த்து வீட்டிலேயே இருப்பது நல்லது, மிகவும் தேவைப்பட்டால் மட்டுமே வெளியே செல்லுங்கள், கண்டிப்பாக முகக்கவசம் அணிந்து செல்லவும், குழந்தைகளை வீட்டிலேயே வைத்திருப்பது நல்லது, தடுப்பூசிக்கு கண்டிப்பாக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

# இணையத்தளம் ஒன்றின் நிதி அனுசரணையில் பண்டத்தரிப்பில் 26 குடும்பங்களுக்கு உதவிகள்





இணையத்தளம் ஒன்றின் நிதி உதவியில் வலி.தென் மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஜோன் ஜிப்ரிக்கோவின் கோரிக்கைக்கு அமைவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் ஒழுங்கமைப்பில் பண்டத்தரிப்பு, சாந்தை பிரதேசத்தைச் சேர்ந்த 26 பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் கொரோனா முடக்கம் காரணமாக பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்ட 1,513 குடும்பங்களுக்கு இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் ஒழுங்குபடுத்தலில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி உட்பட்ட வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலும் நிவாரண உதவித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# தற்காலிகமாக இணைப்புப் பெற்ற தேசியப் பாடசாலை ஆசிரியர்களுக்கு

**(வி.ரி.சகாதேவராஜா)**

நாட்டில் நிலவும் கொவிட் - 19 சூழல் காரணமாக நாட்டில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலைமையின் கீழ் தங்க ளது நிரந்தர பணியிடத்திலிருந்து தற்காலிகமாக வேறொரு பாடசாலையுடன் இணைக்கப்பட்டு இணைப்புக் காலம் முடிவடைந்த ஆசிரியர்கள் மீண்டும் பாடசாலைகள் ஆரம் பிக்கப்பட்டதன் பின்னர் அவர்களின் நிரந்தர பணியிடத்துக்கு மீள வேண்டும்.

மீண்டும் இணைப்பை நீடிக்க விரும்பினால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் தனது நிரந்தர பணியிடத்திலிருந்து அதிபரின் பரிந்துரையுடன் விண்ணப்பத்தை கல்விப்பணிப்பாளர் ஊடாக (ஆசிரியர் இடமாற்றம்) அனுப்பி வைக்க வேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில சி ஜபெரேரா அறிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதியின் உரையில் கல்வி நிலைமை தொடர்பில் முற்றிலும் தவறான, உண்மைக்கு மாறான தகவல்கள்

## போட்டுத் தாக்குகின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்



கொழும்பு,ஜூன் 28

கல்வி தொடர்பில் ஜனாதிபதியின் பேச்சு பொறுப் பற்ற வகையில் அமைந்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டியுள்ளது.

ஜனாதிபதி வெள்ளியன்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

அறுபது வீதப் பாடசாலை மாணவர்களின் கல்வி இழக்கப்பட்ட நிலையில் தொலைதூர இணைய வழி கற்றலூடாக பாரிய முன்னேற்றத்தை அடைந்து உள்ளோம் என்ற ஜனாதிபதியின் கூற்று, மாணவர்கள் நலனில் அரசாங்கம் காட்டும் பொறுப்பற்ற தன்மையை உறுதி செய்கின்றது. கொவிட்19 தொற்றினால் ஒரு வருடம் மூன்று மாதத்திற்கும் அதிகமாக பாடசாலைகள் மூடியுள்ள சூழலில், மாணவர் களின் கல்வி முற்றாக செயலிழந்த நிலையில் உள்ளது.

ஆசிரியர்கள் சுயமாக தமது நிதியை பயன்படுத்தி கற்பித்தலில் ஈடுபட்டு, பகுதி அளவிலேனும் கல்வியை இடைவெளியில்லாது தொடர்கின்றனர்.

எனினும், எவ்வித கல்வி செயற்பாடுகளும் இன்றி இவ் அச்சுறுத்தலில் சிக்கித் தவிக்கும் 43 லட்சம் மாணவர்கள் தொடர்பாக எவ்விதமான வேலைத் திட்டங்களும் அரசினால் முன்னெடுக்கப்படாமை துரதிஷ்டவசமே.

அறுபது வீதமான மாணவர்களுக்கு இணையவழி நிகழ்நிலை ஊடான கற்றல் வாய்ப்புகள் சாத்தியமற்று காணப்படுகின்றன. இவ்வாறான ஓர் இக்கட்டான நிலையில் 2021.06.25 அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பாடசாலைகள் மூடியிருந்தாலும் தொலைதூர இணைய வழிகளின் ஊடாக நிலைபேறுடைய கல்வியினை வழங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையாகப் பெற்றோர், கல்விச் சமூகம், மாணவர்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்த - நிலை குலைந்துள்ள கல்வியினை மீட்டு மேலே கொண்டு வருவதற்கான - அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டம் என்ன என்பது குறித்து அவர் குறிப்பிடவில்லை. அவரின் இந்த மௌனம் கல்விச் சமூகத்திற்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் பத்தாயிரம் பாடசாலைகளுக்குத் தேவையான **fiber, optical** போன்ற நவீன வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளமையானது எந்தளவு நம்பகத்தன்மை வாய்ந்தது எனக் குறிப்பிட முடியாதுள்ளது.

இலங்கையில் மொத்த பாடசாலைகள் 10 ஆயிரத்து 165. அவர் கூறிய பத்தாயிரம் பாடசாலைகள் எங்கு அமைந்துள்ளன என்பது சர்ச்சைக்குரியதாக உள்ளது.

எது எப்படியோ, கல்வி அமைச்சின் புள்ளி விவரப்படி இணைய வீச்சு இல்லாத பாடசாலைகள், பிரதேசத்திற்கு 2,000ற்கும் அதிகமாகும். நவீன தொடர்பு சாதனங்களின் ஊடாக பாடசாலைகள் புதுப்பிக்கப்பட்டிருந்தால் மாணவர்கள் மலை முகடுகளிலும் மரத்தின் மேலேயும் ஏறி ஆபத்தான சூழ்நிலையில் கல்வியைப் பெறுவதற்காக தினமும் போராட்டத் தேவையில்லை. அதை அனுபவிக்கும் பெற்றோருக்கு ஜனாதிபதியின் கூற்று நகைப்பிற்குரிய விடயமாகக் காணப்படுகின்றது.

கொவிட் 19 ஆல் முழுமையாக ஸ்தம்பித்துள்ள கல்வி தொடர்பாக, போதிய தெளிவினை கல்வி அதிகாரிகள் ஜனாதிபதிக்கு வழங்கவில்லை என்பது புலனாகின்றது. தினமும் பொது வெகுசன ஊடகங்களில் எடுத்துரைக்கப்படும் மாணவர்களின் அவலநிலை உரிய அதிகாரிகளை சென்றடையவில்லை போலும்.

இன்று கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழலை, அரசாங்கம் சிறிதும் கவனத்தில் கொள்ளவில்லை என்பதும் தெளிவாகின்றது.

மாணவர்களின் கல்விக் கட்டமைப்பை மீள கட்டி எழுப்பக்கூடிய எந்த ஒரு கல்விக் கொள்கையையோ திட்டங்களையோ இன்றுவரை முன்வைக்கவில்லை என்பது மிகவும் துரதிஷ்டமே .

கல்வி அமைச்சர் பன்னிரண்டு வீதமான மாணவர்களுக்கே இலங்கையில் இணையவழிக் கல்வி வாய்ப்பு கிடைக்கவில்லை என குறிப்பிட்டுள்ளமையானது அவர்களுடைய இயலாமையை இது வெளிப்படுத்துகின்றது.

ஜனாதிபதியின் உரையில் - மாணவர்களின் சீருடை, பாடப் புத்தகங்கள், போசாக் குணவு என்பவற்றுக்காக 2500 கோடி ரூபா ஒதுக்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது.

எனினும் 2021 ஆம் ஆண்டுக்கான சீருடைகள் முழுமையாக இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை. முதலாவது கொவிட் அலையுடன் போசாக்குணவு இடைநிறுத்தப்பட்டுள்ளது என்பதுடன், பின்பு அதற்கு பதிலாக உலர் உணவுபொதி வழங்கப்பட்டது.

மீண்டும் பாடசாலை தொடர்ச்சியாக



நடைபெறவில்லை. எனினும் இச்செயற்பாட்டிற்கு என்ன நடந்தது என்பது குழப்பமாக உள்ளது. கொவிட் அச்சுறுத்தலின் தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்த பயணத்தடை காரணமாக பலரது சீவனோபாயம் பரிதாபத்திற்குரிய நிலையில், பல குழந்தைகள் பட்டினியால் ஊட்டச்சத்துக் குறைபாட்டுக் குள்ளாகி அல்லலுறுகின்றனர் .இந்த சந் தர்ப்பத்தில் பாடசாலையினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு பொதிகளை மாணவர்களுக்கு விநியோகிப்பதற்கான எந்தவித முயற்சிகளும் மேற்கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்க விடயம் ஆகும்.

அரசாங்கமானது மாணவர்களின் எதிர்காலம் தொடர்பாக முன்வைக்கும் அனைத்து விடயங்களும் வார்த்தைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டனவாகவே உள்ளன.

கல்வி கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள இப்பாரிய சரிவை சீர் செய்வதற்காக எவ்வித தந்திரோபாயமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளாது இருப்பது நீண்டகால பாதிப்பினை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்திவிடும். ஆயினும், அரசாங்கத்துக்கு கல்வி மற்றும் மாணவர்கள் மீது எந்தவித அக்கறையும் இல்லை என்பதே இதன் ஊடாக தெளிவாகின்றது.- என்று உள்ளது.

# அரசியல் கைதி ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் நாமலைச் சந்தித்தனர்

## தந்தையை விடுவித்துத் தருமாறு கோரினர்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 28

அரசியல் கைதியான ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை நேற்று சந்தித்தனர்.

வடமராட்சியின் முள்ளி பகுதியில் இடம்பெற்ற சேதனக் குப்பைகளை இயற்கை உரமாக மாற்றும் தொழிற் சாலை திறப்பு விழாவிற்கு வந்தபோதே நாமல் ராஜபக்ஷவை ஆனந்தசுதாகரின் பிள்ளைகள் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது தமது தந்தையை விடுதலை செய்து தருமாறு, ஆனந்த சுதாகரின் மகன் கவிரதன், மகள் சங்கீதா ஆகியோர் அமைச்சர் நாமலிடம் கோரிக்கை விடுத்தனர்.

சச்சிதானந்தம் ஆனந்த சுதாகர், 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 9 வருடங்களாக மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவருக்கு 9 வருடங்கள் கழித்து ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.இந்த நிலையில், இவரின் 36 வயதான மனைவி யோக ராணி 2018 இல் உயிரிழந்திருந்தார்.

ஆனந்தசுதாகரை மனைவியின் மரணச் சடங்கிற்கு அழைத்து வந்திருந்த போது, அவர் திரும்பிச் சென்ற சமயம் அவரின் மகள் சிறைச்சாலை பஸ்ஸில் தாமும் தந்தையுடன் ஏறிச்செல்ல முயற்சி செய்திருந்தமை பார்த்தவர்களின் மனதை நெருட வைத்திருந்தது.

அதேவேளை ஏனைய அரசியல் கைதிகளின் உறவுகளும், அண்மையில் விடுதலையான அரசியல் கைதிகளும் அமைச்சர் நாமலை இன்று சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

# ஏனைய அரசியல் கைதிகளும் விரைவில் விடுதலையாவார்கள்!

## அரசு தமிழரை ஏமாற்றாது என்கிறார் தினேஷ்

கொழும்பு,ஜூன் 28

கடந்த நல்லாட்சி அரசுதான் தமிழ் மக்களை ஏமாற்றி ஆட்சி நடத்தியது. கோட்டாபய அரசு ஒரு போதும் தமிழ் மக்களை ஏமாற்றாது; தமிழ் மக்களை வைத்து அரசியல் நடத்தாது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அரசு அதீத அக்கறை கொண்டுள்ளது.

-இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஊடகங்களிடம் தெரிவித்தார்.

மரணதண்டனைக் கைதி துமிந்த சில்வாவைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்ததை மூடிமறைப்பதற்காகவே தமிழ் அரசியல் கைதிகளில் 16 பேரை ஜனாதிபதி விடுதலை செய்தார் என்று எதிரணியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை அரசு அடியோடு நிராகரிக்கின் றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசு பதவியேற்ற நாள் தொடக்கம் துமிந்த சில்வாவைப் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு கொழும்பு மாவட்ட மக்கள், ஆளும் கட்சியினர் மட்டுமல்ல எதிரணியினர் கூட ஜனாதிபதியிடம் எழுத்தில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கடந்த ஆட்சியில் அரசியல் அழுத்தம் காரணமாகவே துமிந்த சில்வா மரண தண்டனைக் கைதியானார்.

தண்டனைக்காலம் நிறைவடையவுள்ள நிலையிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளே விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும், இது தமிழர்களை ஏமாற்றும் செயல் என்றும், தமிழ் அரசியல்வாதிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களையும் அரசு அடியோடு நிராகரிக்கின்றது.

கடந்த நல்லாட்சி அரசுதான் தமிழ் மக்களை ஏமாற்றி ஆட்சி நடத்தியது. கோட்டாபய அரசு ஒருபோதும் தமிழ் மக்களை ஏமாற்றாது; தமிழ் மக்களை வைத்து அரசியல் நடத்தாது. தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் அரசு அதீத அக்கறை கொண்டுள்ளது. அதை வெளிப்படுத்தும் முதல் சமிக்ஞையாகவே தமிழ் அரசியல் கைதிகள் 16 பேரை பொதுமன்னிப்பின் கீழ் ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார். சிறையிலுள்ள ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிக்கும் நடவடிக்கையை அரசு முன்னெடுக்கும்.

அதேவேளை, தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்கும். எனவே, அரசை தமிழ் மக்கள் நம்ப வேண்டும். - என்றார்.

# பத்து நாள்களில் 531 பேரை காவு கொண்ட கொரோனா!

இலங்கையில் கடந்த 10 நாள்களில் 531 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று தேசிய தொற்றுநோய் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 16ஆம் திகதியிலிருந்து 25ஆம் திகதிவரை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்திய தினசரி கொரோனா மரணங்களின் அறிக்கைகளுக்கு அமைவாக இந்த எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக கடந்த 10 நாள்களில் 229 பெண்களும், 302 ஆண்களும் கொரோனாத் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

அவர்களில் 30 வயதுக்கு உட்பட்ட 9 பேர் மரணமடைந்துள்ளனர். அதேவேளை, 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 103 பேரும், 60 வயதுக்கு மேற்பட்ட 419 பேரும் மரணமடைந்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி 71 கொரோனா மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிசெய்யப்பட்டன.

இது நாட்டில் ஒரே நாளில் பதிவான அதிக எண்ணிக்கையிலான மரணங்கள் என்று தேசிய தொற்றுநோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.